



# ரமணோதயம்

ஜூலை 2026
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து
உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 25 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2026

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41/20, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41/20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2026


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 13 |
| 3 | சாந்தியும் விசாரமும் | வேங்கட் S. ரமணன் | 21 |
| 4 | வேதம் காட்டும் வாழ்க்கை நெறி | டாக்டர் அபிநவம் ராஜகோபாலன் | 31 |
| 5 | டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு | மா. முருகேசன் | 43 |
| 6 | இனிவரும் திருநாட்கள் | | 50 |
| 7 | இரைச்சலுக்கு நடுவே ஓர் அமைதி | ரூபவதி | 51 |
| 8 | யாவும் ரமணன் | வித்யாசங்கர் | 58 |
| 9 | ரமண தரிசனம்: கண்டேன் அவர் திருப்பாதம் | D. தியாகராஜன் | 59 |
| 10 | ரமண புராணம் | ஆகுரா | 67 |
| 11 | அஞ்சல் என்றே அருள் அருணாசலா | தீபா மகேஷ் | 73 |
| 12 | செய்திகள் | | 77 |

# ஆசிரியர் உரை

## சுத்த மௌனத்தில் தோன்றும் பராபரம்

“இறைவனைக் குறித்த பரமார்த்திக சத்தியம்” — இறைவனைப் பற்றிய பேருண்மை எக்காலத்திலும் நிரந்தரமான சத்தியம். எனினும், காலப்போக்கில் மனிதனின் லட்சியங்கள், எண்ணங்கள் போன்றவை மாறுபடுகின்றன. மாறுகின்ற மனித மாற்றத்திற்கு ஏற்றவாறு இத்தத்துவங்களின் புறப் பகுதிகளை சற்றே மாற்றியமைக்க வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. மனிதனால் இதை செய்ய முடியாது. இத்தகைய மனம் தாண்டிய மாற்றத்தை ஒழுங்குபடுத்த தக்கதோர் வழிகாட்டி தேவை. இதனை நிகழ்த்த இறைவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆன்மிக வழிகாட்டு முகமாக பல்வேறு வடிவங்களில் தோன்றுகின்றான். இவ்வழிகாட்டியே சற்குரு எனப்படுகின்றான். நிரந்தரமான பரமார்த்திக சத்தியத்தை இக்கால சமுதாயத்தின் தேவைகட்கு ஏற்ப செதுக்கி வடிவமைக்கிறான்.

நமது சமயத்தின் அடிப்படைக் கருத்து “ஏகம் சத் விப்ரா பஹூதா வதந்தி” “எப்போதும் இருக்கின்ற பரவஸ்து ஒன்றே தான். அதுவே ஆன்மா. மற்றையாவும் புறத் தோற்றங்களே.” இந்த அடிப்படைப் பேருண்மையை மீண்டும் நிலைநிறுத்தி அனைவரும் புரிந்து கொண்டு அப்பியாசிக்கும் வண்ணம் எடுத்துரைக்க அவதரித்தவரே பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி. தமது உரையாடல், உபதேசங்கள் மட்டுமன்றி பிற ஞானிகள் கவிதைகள் மூலம்

*விளக்கி சாதகர் மனத்தில் ஆழப் பதியச் செய்வதே பகவானின் பெருங்கருணைக் கொடை. பகவானின் இப்பெருங்கருணை பேராற்றின் திவலைகளை கடந்த 25 ஆண்டுகளாக ரமணோதயம் வாயிலாய் நாம் கற்றும் படித்தும் அனுபவித்தும் பயன்பெற்று வருகிறோம். பகவானுடைய உபதேசங்கள் நம் உள்ளத்தில் ஊறும்போது, இதுகாறும் நம்மை உலகுடன் பிணைத்து நம்மை உலகப்பற்றுகளுக்கு அடிமையாக்கிய எல்லாச் சங்கிலிகளும் நொடியில் அறுபட்ட பெரும் வித்தையைக் காண்கின்றோம்.*

*தாயுமானவர் தமது பராபரக்கண்ணியில் பாடுகின்ற பாடலில், "எனது பண்டைய வினைகள், கர்மங்கள் அழிந்து பற்றற்று போகும்படி செல்லவைத்தது அந்த பராபரனின் கருணையேயன்றி எனது முயற்சியினால் அல்ல" என்று பெரும் வியப்புடன் கூறுகின்றார். ஆன்ம சாக்ஷாத்காரத்தை அடைய அடிப்படைத் தகுதி உலகப் பொருள்கள்மீது பற்று அறுபட்டு பரமாத்மாவின்மீது அளவிடற்கரிய பற்றுதல் வைத்தலே. இதையே முருகனார் ரமண சந்நிதிமுறையில்:*

*"பற்றற்று நிற்கும் பரிசன்றோ பண்டைவினைத்*
*தொற்றற்று நிற்கச்செய் சூழ்ச்சி பராபரமே"*

*— ரமண சந்நிதி முறை 155*

*சந்நிதிமுறை 149 பாடலும் இக்கருத்தையே கூறுகின்றது:*

*"பற்றற்ற பாவன நின் பற்றாலே மற்றவற்றின்*
*பற்றற்று நிற்கும் பதம் அடைவது எந்நாளோ?"*

*பலாப்பழத்தை நறுக்கும்பொழுது அதிலுள்ள பிசின் கையில் ஒட்டிக் கொள்ளும். எனவே அதனை நறுக்கும் முன்னர் கையில் எண்ணெய் தடவிக் கொண்டு நறுக்குவார்கள். அப்போது கையில் பிசின் ஒட்டாது. இறுதியில் பிசினற்ற இனிமையான பழத்தைச் சுவைக்கலாம். அதுபோன்றே உலக*

வாழ்க்கை நடத்துவதில் நோக்கமே ஆத்மசாக்ஷாத்காரம் என்னும் இனிய கனியைச் சுவைப்பதுதான். ஆயினும், இவ்வுலக வாழ்க்கையில் செல்லும்போது பற்றுகள், ஆசைகள் போன்றவை பிசின்போல ஒட்டிக் கொண்டு, சாதகனின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது. ரமண மகாகுரு மீதுள்ள இடையறாத பரபக்தி என்னும் எண்ணெயைக் கையில் தடவிக் கொண்டு இவ்வுலக வாழ்க்கை என்னும் பலாப்பழத்தை நறுக்கினால் ஆசை, மோகம், துவேஷம் போன்ற பிசின் நம் கையில் ஒட்டிக் கொள்ளாது. இறுதியில் ஆத்ம சாக்ஷாத்காரம் எனும் கனியைச் சுவைக்கலாம் என்பது ஞானியர் காட்டும் வழி. இந்தக் கருத்தை 'சார்புரைத்தல்' என்னும் பகுதியில் அடியார் கூறுகின்றார்:

"பாசபந்தம் அறுக்கும் பரரமண
ஈசன் தன்னடிக்கே ஏவல் செய்து, அவ்விறை
நேசம் ஆக நிகழ்த்தும் திருவுளத்து
ஆசிபெற்றோர் அமரர்க்கும் உம்பரே"

என்று ரமண திருவடிக்கு பணி புரிவோர் அவ்விறைவனால் தமது பாச பந்தங்கள் அறுக்கப்பட்டு, பகவான் அன்போடு வழங்கும் அருளாசியைப் பெற்று தேவர்கட்கும் மேலானவர் ஆவர் என்று அறுதியிட்டு கூறுகின்றார்.

'சக்தி நிபாதம்' என்னும் இறையருள் வீழ்ச்சி நம் முயற்சியால் வருவதல்ல. இறைவன் அருளாலேயே அது சித்திக்கிறது. அப்பொழுது நாம் செய்ய வேண்டியது தான் என்ன? மனத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளுவதே நாம் செய்ய வேண்டியது. பற்று, காமம், கோபம், வெறுப்பு போன்ற தீய எண்ணங்கள் இல்லாமல் நம் மனநிலையை வளர்த்துக் கொள்ளுதல், மெய்யுணர்வை மனதில் வலிமைப் பெறச் செய்தல் ஆகியவை மட்டுமே நாம் செய்ய வேண்டிய கடமை. அப்போது இறைவன் நமக்கு நேரே வந்து ஆட்கொள்ளுவான்

என்பதை எண்ணப் பதிகத்தில் முருகனார் அழகுறக் குறிப்பிடுகின்றார்:

‘தீண்டாமை என்னும் தீத் தீட்டு அறவொழித்து என்
சிந்தைதூயது ஆயிட வேண்டும்.
வேண்டாமை என்னும் விழுப்பொருள் வேண்டும்
மெய்யுணர்வு உரம்பெற வேண்டும்
மூண்டாரு நின்புன் முறுவலுக் குணவா
முப்புரஞ் செற்றவேங் கடவா
ஈண்டாமை யிச்சை யவிச்சை வேரறச் செற்
றென்னையு முய்யக்கொண் டருளே.’

— ரமண சந்நிதிமுறை 208

(பொருள்: ஈண்டாமை சத்சங்கத்தில் சேராதிருத்தல்; இச்சை ஆசை; அவிச்சை மெய்யறிவு இல்லாமை)

சித்த சுத்தியும் ஆசையின்மையும் தான் இறையருள் பெற அடிப்படைத் தேவைகள் என்னும் பேருண்மையை அழகுற எடுத்துக் கூறி “அடிகள் எனது ஆசைகளை அடியோடு வேரறுத்து என்னை ஆட்கொள்ள வேண்டும்” என்று வேண்டுகிறார்.

“ஆசைகளை அறுத்தல்” என்பது அப்பியாசத்தில் கொண்டு வரும்போது, அடிக்கடி வெவ்வேறு ஆசைகள் முளைவிடுவதைக் காண்கிறோம். ஆசைகள் முளைக்கும்போதெல்லாம் அவற்றை ஒவ்வொன்றாக களைந்து எறியும்போது உள்ளத்தில் வைராக்கியம் படிப்படியாகப் பிறக்கின்றது. இறைவனைத் தவிர வேறெதுவுமே வேண்டாம் என்ற உறுதி பிறக்கின்றது.

முன்னே ஒரு பாடலில் பல்வேறு சிற்பிகள், ஓவியர்கள் செய்த கலைப் பொருள்கள், இனிய சங்கீதம், நல்ல அறுசுவை உணவு, நறுமணம் வீசும் சந்தனம், அகில் போன்றவை அழகிய மங்கையர், பஞ்சேந்திரியங்களின் நுகர்ச்சிக்குரிய பல்வேறு பொருள்கள் என்று பட்டியலிட்டுக் காட்டி இவை

எல்லாவற்றையுமே சுவைக்கும் கருவியாம் உடலின்மீது நான் கொண்ட ஆசை எனது ஆன்மிக அப்பியாசத்தால் அறவே ஒழிந்தது என்கிறார் முருகனார்.

இதைத் தொடர்ந்து முருகனாரின் பற்றறுக்கும் பயிற்சியில் ஒரு சுவையான சம்பவம். எல்லாவற்றிலும் பற்றினை நீத்து பரம பதம் ஒன்றை மட்டுமே பற்றியிருந்த முருகனாருக்கும் சம்பிரதாய சடங்குகளின்மீது சிறிது பிடிப்பு இருந்தது. ஒருநாள் அதிகாலையில், அன்றைய தினம் தனது தந்தையின் திதி நாளாகியதால், அதற்கான மடி வஸ்திரத்தை முருகனார் வேட்டியைப் பிழிந்து உலர்த்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த பகவான், “என்ன விசேஷம் இன்று? எதற்கு மடி வேஷ்டி? ஓ, இன்று உங்கள் தகப்பனாரின் சிரார்த்த தினம் அல்லவா? சரி, சரி. இங்கு வந்தாலும் இது விடவில்லை போலும்! சரி, பிராம்மணார்த்தத்திற்கு இரண்டு ஆட்கள் வேண்டுமல்லவா? இதோ நான் ஒருவன் இருக்கின்றேன்!” என்று தன் நெஞ்சத்தைத் தொட்டுக் காட்டி, “இன்னொரு பிராமணராக அதோ ரங்காராவ் வந்து கொண்டிருக்கிறார். அவரை அழையுங்களேன்” என்றார் பகவான். அவ்வளவுதான்! பகவான் சந்நிதியில் உள்ளபொழுது வேறு நியமங்கள் எதுவுமே அவசியமில்லை என்று உணர்ந்த முருகனார், நியமங்கள் அனைத்தையும் அன்றுடன் நீத்தார். பற்றுக்களை நீக்க பகவானே நேரில் வந்து அருளிய அருட்செயல் இது.

மீண்டும் அடுத்த ஆண்டு சிரார்த்த தினத்தன்று நியமங்கள் செய்யா விடினும் ஒரு பழமாவது படைக்கலாம் என்று எண்ணிய முருகனார், ஒரு பலாப்பழத்தைக் கொண்டு வந்து அதிகாலை சமையல் கூடத்தில் வைத்தார். அப்போது அங்கு வந்த பகவான், “என்ன வாசனை! திதியன்று பலாப்பழ படையலோ!

என்ன செய்வது? வாசனை எங்கே விடுகிறது?" என்று வாசனை என்ற சொல்லை சிலேடையாக உபயோகித்து, மணம் என்ற பொருளிலும் சம்ஸ்காரம் என்ற பொருளிலும் உபயோகித்து கூறினார். அவ்வளவுதான். அதைக்கேட்ட மாத்திரத்தில் உலகச் சடங்குகளிடம் முருகனார் கொண்டிருந்த பற்றனைத்தும் சட்டென அறுந்தன.

இவ்வாசனை எல்லாம் போனாலும் மாபெரும் தமிழறிஞராகிய முருகனாருக்கு திருக்குறள் போன்ற உயர்ந்த தமிழ் நூல்களின்மீது அளவிறந்த காதல் இருந்தது. அந்த சிறிய பற்றும் கூட பகவானது திருக்கண்நோக்கத்தில் முற்றும் மறைந்தது.

"வள்ளுவர் முற்சொல் வண்தமிழ் நூலில்
தெள்ளிய ஆசையும் தீர்ந்தது"

என்று கூறும் முருகனார், இறைவன் திருவடி நிழலில் உறைய வேண்டும் என்ற ஒரே எண்ணமே என் உள்ளம் முழுதையும் ஆட்கொண்டு விட்டபடியால் மற்ற ஆசைகளுக்கு அங்கே இடமே இல்லை என்று குறிப்பிடுகிறார். அவர் இதயம் முழுதும் அத்வைத ஞானமே நிரம்பியிருப்பதால் வேறு எதற்கும் அங்கு இடமே இல்லை.

மின்விளக்குகள் இரு வகைப்படும். ஒருவகை விளக்கில் பல்பின் உள்ளே வெற்றிடம் இருக்கும் மற்றும் அங்கே ஒரு மின்னிழையும் இருக்கும். இந்த இழையில் மின்சாரம் செலுத்தப்படும்போது இழை ஒளிர்கிறது. ஞானிகள் இங்ஙனம் தங்கள் இதயத்தை எண்ணம் எதுவுமே இல்லாமல் வெற்றிடமாய், சூன்யமாய் ஆக்கிக் கொள்கிறார்கள். ஆத்மசாக்ஷாத்காரம் நூலிழைபோல வரும்போது இதயம் பிரகாசிக்கிறது. இது வெற்றிடம் கொண்ட பல்பில் மின்சாரம் பாய்ந்தவுடன் மின்னொளி வருதல் போலாம்.

வேறு சிலவகை பல்புகளில் ஆர்கான் போன்ற வாயுக்கள் (*Inert gases*) நிரப்பப்பட்டு இருக்கும். இத்தகைய வாயுக்கள் நிரம்பிய பல்பில் இழையின் வழியே மின்சாரம் செலுத்தப்படும் பொழுது இழையே இந்த வாயுவில் ஒளிர்ந்து பிரகாசமான ஒளி கிடைக்கிறது. இது போன்ற பல்வேறு யோகாப்பியாசம் பயிலும் சாதகர்கள் உள்ளத்தை சாதனைமூலம் எண்ணமற்ற வெற்றிடமாக ஆக்கும்போது அங்கே இறையருள் வந்து ஒளிர்கிறது. அதேசமயம் முருகனார் போன்று பகவானிடம் பூரண சரணாகதி செய்த ஞானிகள் தமது உள்ளத்தை பரபக்தியால் நிரப்பிக் கொள்ளும்போது அங்கே இறையருள் *Argon Bulb* போன்று சுகமாய் ஒளிர்கிறது.

ஸ்ரீ ரமண ஞான போதம் என்னும் மிக உயர்ந்த நூல் தொகுப்பில் பகவானுடைய அருளுரையாக முருகனார் அளிப்பது இதுவேயாகும்:

“இருட்பாழ் அசல இதயத்து எழுந்த
புரிப்பான சுத்த அருள் போத ஸ்வரூபன்
சுரப்பான மோன சொரூப அமைதி
விருப்பால் ஒழிந்தது அயல்வேட்கை எலாமே”

— ரமண ஞானபோதம் 557

அஞ்ஞான இருள் நீக்கும்படி இதயத்தில் மலர்ந்த ஞான ஸ்வரூபனாம் ரமணன் புரிந்த அனுபூதியினால் என் உள்ளத்தில் இருந்த வேட்கைகள் எல்லாமே அழிந்து போயின என்கிறார் முருகனார். வள்ளுவர் வாக்கில் கூறுவதுபோல அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் எனும் தீய குணங்களை முற்றிலும் நீக்குவதே அறநெறி ஆகும். அவா அறுத்தல் என்பது ஆத்மசாக்ஷாத்காரம் அடைய இன்றியமையா தேவை. ஸ்ரீ ரமணன் அருளிய அனுபூதியினால் ஞானத்தை அடைய தடையாய் இருந்த தீய குணங்களுடன் மனமும் முற்றே அழிந்தது.

“தெள்ளிய அருட்செல்வம் என் உள்ளத்து
அடைந்ததால் அற்றது அவா” (ரமண ஞான போதம் 60)

“ஈசன் அருளால் அவா என்னும் கடலைத் தாண்டியபின் சுத்த மௌனமாம் பேருணர்வு என்னை முழுதுமாக ஆட்கொண்டு விட்டது” என்பது பக்த சிகாமணியாகிய முருகனாரின் வெளிப்பாடு.

“ஆசை அறச்செற்ற அருட்பரையாய் ஆர்ந்தது எனக்கு
ஓசையற்ற மோன உணர்வு” (ஞான போதம் 62)

“நீளப்படைத்த சிவநேயம் மிக்கூடுதலால்
மாளுற்றது ஆசை மயல்” (பாடல் 63 ஞான போதம்)

ஆசை, அழுக்காறு, உள்ளோசை, வெளியோசை அனைத்துமே நீங்கிய மௌனம் சித்திக்கிறது. இதையே தான் தாயுமானவர்

“சித்த மௌனம் மனோ வாக்கு எலாம் மௌனம்
சுத்த மௌனத்தில் தோன்றும் பராபரமே”

என்று தெளிவாகக் கூறுகிறார்.

சத்சங்கத்தோடு சேர்தலால் சுத்த மௌனம் எழுந்து பகவானின் ஆத்ம ஸ்வரூபத்தை உணரும்போது எனக்குக் கிட்டியது. அப்பொழுதே எனது அகந்தை அழிந்தது என்கிறார் அடியார்.

“நட்டே மூழ்கலின் மெய்ந் நம்ப அடியாரொடும்
தொட்டேன் அவனடி என் சொந்த ஸ்வரூபம்
உள்தேர் உணர்வாய் ஒழிந்த அகந்தையாம்
விட்டேன் அகிலவித வேட்கை திரள்களுமே” (பாடல் 68)

இந்தப் பாடலில் சத்சங்கத்தில் இணைவதில் வரும் பெரும் பேற்றை அடியார் குறிப்பிடுகிறார். மெய்யடியாரோடு ஒன்று சேர்ந்து தியான நெறியினை பின்பற்றும்போது பகவானுடைய சொரூப ஞானத்தை உணர்கிறேன். அப்பொழுது இதுகாறும் தடையாய் இருந்த அகந்தையொடு ஏனைய எதிர்மறை எண்ணங்களும் அழிகின்றன.

பின்னர் ரமண ஞான போதம் 5 ஆம் பகுதியில் வரும்போது, உள்ளத்தே அத்வைத சமாதி உணர்வோடு இருக்கும்போது, வேட்கை, அச்சம், மயக்கம் எல்லாமே ஒழிந்துபட்டன என்கிறார் அடியார். இந்நிலையில் சொரூப உணர்வினைத் தவிர வேறெதுவுமே இல்லை என அறுதியிடுகின்றார்.

"தன் சொரூபமாக ஒளிர் சாந்தியே ஆகலின் என்று
எஞ்சியதில் இன்பம் இலை"

மற்றைய பற்றுக்கள் எதுவுமே என்னைப் பற்றாதபடி, என் உள்ளத்தே இறைவன்மீதுள்ள பற்று முழுமையாக நிரம்பிவிட்டது. அப்பொழுது மனத்தில் வேறெந்த பற்றுமே எழவில்லை. எதிர்மறை எண்ணங்கள் எல்லாமே இறையருளால் ஒழிந்தன.

"மற்றொரு பற்றும் மனத்தில் எழாமல் எனை
பற்றற்று இறைவனருள் பற்று" (5919)

"உடையான் அருளால் ஒழிந்தது வெம்பாசம்
படையால் விளைந்த படர்" (5920)

பகவானே தன் வாக்கில் ரமண புராணத்தில் கூறுகின்றார். "தன்னடியே பற்றாகப் பற்றிக் கொண்டு அந்த இறைவனது பற்றையே எண்ணி மற்றவை எல்லாவற்றையும் துறந்தவர்க்கு அத்தன்மையாய் அப்பற்றை ஒழிந்தவன் தாள் போற்றி" என்கிறது ரமண புராணம்.

பற்றாக தன்னடியே பற்றி அந்தப் பற்றுக்கே
பற்றார்கட்கு பற்றானாய் பற்றோன் அடி போற்றி"

மனதில் தீவிர வைராக்கியம் இருந்தாலன்றி உலகப் பற்றிலிருந்து விடுபட முடியாது என்பதை நீலகண்ட தீக்ஷிதர் மிக அழகாக நகைச்சுவை ததும்பக் கூறுகிறார்.

"ஜாதம் ஜாதம் கத மபி கதம்
பால்யதே லௌல்யதே எதோவா
நேதஸ்தேயம் க்ஷணவய க்ருணே

*முஞ்சதஹ் கோ முகூர்த்த:*
*இத்யத் எந்த வ்யவசித த்யோ*
*நிஸ்சரந்தோபி கேஹாத்*
*ஆவர்த்தந்தே ஜடிதி ருததாம்*
*சாந்த வதேஹதோ: ஸிமூநாம்"*

*இந்த அழகான பாடலின் பொருள்:*

*"இந்த வாழ்க்கை முழுவதும் அநாவசியமான வெளி விஷயங்களிலும் வீட்டு விவகாரங்கள் பற்றிய தேடல்களிலுமே கழித்து விட்டேன். இனி ஒரு கணம்கூட இந்த வீட்டில் இருக்க மாட்டேன். துறவறம் பூண்டு காட்டிற்கு செல்வேன் என்று கிளம்புகின்றான். அவன் வாசற்படியை அடைந்தவுடன் குழந்தையின் அழுகுரல் கேட்கிறது. யாரும் குழந்தையை எடுக்கவில்லை. உடனே அவனது வைராக்கியம் எல்லாம் ஆவியாகப் போய், 'இந்த வீட்டில் அழுகிற குழந்தையைப் பார்த்துக் கொள்ளக் கூட ஆள் இல்லை. நான் தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டி இருக்கிறது' என்று முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போய்விடுகின்றான்" என்கிறார் தீக்ஷிதர்.*

*இத்தகைய பெருவலிமை வாய்ந்த ஆசைகளையும் பற்றுகளையும் நீத்து ஆத்மசாக்ஷாத்காரம் அடைவது ஸ்ரீ ரமணர் போன்ற பகவானின் அவதாரத்தால் மட்டுமே முடியும். ஆசான் அருளால் அவாக்களை நீத்த மனம், தான் என்கிற சத் உணர்வாலேயே நிறைகிறது. அந்தப் பேரானந்த உணர்வு எப்போதும் நம் உள்ளத்தில் நிறைந்து ததும்புகிறது என்பதைக் கண்டோம்.*

*மீண்டும் சந்திப்போம்*

*பகவான் பணியில்,*

*தங்கள்*

*ராம் மோஹன்*

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது

## மொழிமாற்றம்: ராம் மோஹறன்

### 42. புறப்பாடு

இன்னும் இரண்டு நாட்களில் நான் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட வேண்டும். என் நண்பர்கள் சிலரை நேரில் சந்தித்து விடைபெற வேண்டியிருக்கிறது. எனது புறப்பாடு நெருங்கிவிட்டதை அறிந்த சிலர், என்னை இறுதியாகப் பார்ப்பதற்காக என் அறைக்கே வருகிறார்கள்.

இந்தியாவிலிருந்து வெளியேறும் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக்கப்பட்ட தடுப்பூசிகளால், கடந்த சில மாலைப் பொழுதுகளில் எனக்குக் காய்ச்சல் அடித்தது. குளிர் நாடுகளை விட வெப்பமண்டலப் பகுதிகளில் காய்ச்சலின் தாக்கம் அதிகமாகவே தெரிகிறது. இருந்தாலும், என் உடல் திருவண்ணாமலையின் அற்புதமான தட்பவெப்பநிலையை நன்றாகவே தாங்கிக்கொண்டது. வெளியிலிருந்து செலுத்தப்பட்ட இந்தத் தடுப்பூசியால் வந்த காய்ச்சலைத் தவிர, இந்தியாவில் நான் தங்கியிருந்த முழு காலத்திலும் எனக்கு வேறு எந்த உடல்நலக்குறைவும் ஏற்படவில்லை.

நான் முதலில் மெட்ராஸிற்குச் (சென்னை) சென்று, அடையாறில் உள்ள பிரம்மஞான சபையின் (Theosophical Society) பிரம்மாண்டமான தலைமையகத்தில் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டும்; ஆசிரமத்திற்கு வரும் வழியிலேயே நான் அங்கு ஒருமுறை (குறுகிய காலம்) சென்று வந்திருக்கிறேன். போக்குவரத்து விசாக்கள் (transit visas) தொடர்பான நடைமுறைகளை முடிப்பதற்குச் சில

நாட்கள் ஆகும். அதன் பிறகு, தென்னிந்தியா வழியாக ரயிலில் சிலோனுக்கு (இலங்கை) ஒரு பயணமும், இறுதியாக இந்தியப் பெருங்கடலில் கப்பல் பயணமும் இருக்கும்.

நண்பர்களுடனான உரையாடல்களில், நான் விரைவில் ஆசிரமத்திற்குத் திரும்புவேன் என்ற என் நம்பிக்கையை அல்லது ஒரு தீர்க்கதரிசன உணர்வை வெளிப்படுத்தினேன்; நாங்கள் மீண்டும் சந்திப்போம் என்று அவர்களும் உணர்ந்தார்கள். ஆனால், என் இன்னொரு தீர்க்கதரிசன உணர்வை — இல்லை, அது என் உள்மனதின் அசைக்க முடியாத நிச்சயம் — நான் யாரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை. அது, குருநாதரை (பகவானை) அவரது பௌதிக உடலில் நான் இனிமேல் பார்க்கவே மாட்டேன் என்பதுதான்.

இந்த வாக்கியத்தை நான் கிட்டத்தட்ட என் சுயநினைவின்றி எழுதினேன்; வாசித்தபோது நானே திகிலடைந்தேன். அதன் பொருள், தியான மண்டபத்திலும், உணவுக்கூடப் பாதைகளிலும், ஆசிரம வளாகத்திலும் அவரது இடம் இனி வெறிச்சோடி, பாழாய்க் கிடக்கும் என்பதுதான். எனக்குள் இருக்கும் எல்லா 'இருளையும்' உண்மையிலேயே அகற்றும் அந்தப் பேரொளி, அந்த மாபெரும் விளக்கு அணையும் போது, ஏற்படப்போகும் இந்த வெற்றுத்தன்மையையும் இருளையும் நான் எவ்வாறு தாங்குவேன்? அப்போது, எண்ணங்களை உருவாக்கி என்னை வதைக்கும் என் துரோகப் பகையான மனம், என் மீது ஓர் அடியை வீச இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறது: 'ஓ, நீ அதற்குள்ளாகவே குருநாதரை அடக்கம் செய்துவிட்டாயா? அவர் இன்னும் உயிரோடு இருக்கும்போதே, அவர் மறைந்த பிறகு நீ எப்படி உணர்வாய் என்று கற்பனை செய்து கொண்டிருக்கிறாயே!' என்று அது ஏளனம் செய்கிறது.

இது எனக்குத் தாங்க முடியாததாக இருந்தது; என் மூளையில் ஒரு கரிய மின்னல் வெட்டியது போலிருந்தது. அது ஒரு வினாடியின் நூறில் ஒரு பகுதி நேரமே நீடித்திருக்கும், ஆனால் என் பக்கத்தில் அமர்ந்திருந்த திரு. X அவர்கள் பதற்றத்துடன் என் கையைப் பிடிப்பதற்கு அது போதுமானதாக இருந்தது. 'உங்களுக்கு என்ன ஆயிற்று? நீங்கள் என்ன காண்கிறீர்கள்?' என்று அவர் கேட்டார். ஆனால், அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. 'நான் யார்?' என்ற அந்த மாயக் கேள்வியை எனக்குள் கேட்ட மாத்திரத்திலேயே, தற்காலிகமாக இழந்த என் மனச்சமநிலையை நான் மீட்டெடுத்தேன். அந்த இழப்பு நீடித்திருந்தால் அது ஆபத்தாக முடிந்திருக்கக்கூடும். அதோடு, 'காலம்' என்று நாம் அழைக்கும் விஷயம் எவ்வளவு மாயையானது என்பதை நான் மீண்டும் ஒருமுறை உணர்ந்தேன்.

'ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாள் போலவும், ஒரு நாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும் இருக்கிறது' என்ற பைபிளின் ஆன்மிக வாக்கியம் என் காதுகளில் ஒலிக்கிறது.

'விசேஷமாக ஒன்றும் இல்லை, அன்பான மருத்துவரே' என்று நான் அமைதியாகப் பதிலளித்தேன். 'அது அநேகமாக அந்தச் சாப்பாட்டு நேரத்திற்கு முன் போட்டுக்கொண்ட காலரா தடுப்பூசியின் விளைவாக இருக்கலாம். உங்களது நல்ல அறுவை சிகிச்சை நிபுணர் அவ்வளவு பெரிய அளவை (dose) அல்லவா செலுத்தினார்!' என்றேன்.

'சற்று சீக்கிரமாகவே இருந்தாலும், பகவான் வருவதற்கு இன்னும் அரை மணி நேரம் ஆகும் என்றாலும், நான் மண்டபத்தில் சிறிது நேரம் உட்கார விரும்புகிறேன்; இப்போது அது அமைதியாகவும் முற்றிலும் காலியாகவும் இருக்கும்' என்கிறார் என் தோழர். நாங்கள் எழுந்திருக்கிறோம்; எனது முதல் சில அடிகள் சற்றே

*தடுமாறுகின்றன. தடுப்பூசியைப் பற்றி நான் சொன்ன என் சொந்த வார்த்தைகளை நானே நம்ப வேண்டுமா?*

*நான் புறப்படும் நேரம் நாளை மறுநாள் அதிகாலையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இன்று இரவு நான் மகரிஷியிடம் விடைபெற்று, புறப்படுவதற்கான அனுமதியைக் கேட்க வேண்டும். இந்த வழக்கம் ஒரு சடங்கு போன்றதுதான் என்றாலும், அதன் ஆழமான மறுபக்கம் மிகவும் முக்கியமானது. மகா ரிஷியின், ஒரு நல்ல நண்பரின், சிறந்த பாதுகாவலரின் உடனடிச் சந்நிதியில் கழியும் கடைசி மணித்துளிகள் இவை. அவை ஒருபோதும் மீண்டும் வராது. மகா ரிஷியின் முன்னிலையில் முளைத்த இந்தச் சிறிய ஆன்மிகக் கவிதைகள் வளர்வதற்கு எனக்கு என்ன ஆறுதல் கிடைக்கும்? எந்தச் சூரியன் இதைக் கதகதப்பாகக் காக்கும்?*

*என் அறையில் அவ்வளவு அமைதி நிலவுகிறது. காவலாளி குடிநீர் கொண்டு வரும் தன் கடமையை முடித்துவிட்டுச் சென்றுவிட்டான். வேலைக்காரப் பெண்ணையும் காணவில்லை; உணவுக்கு முந்தைய அந்தச் சில மணி நேர ஓய்வை அவளது சொந்த காரியத்திற்காகப் பயன்படுத்துகிறாள்; ஒருவேளை அவள் அருகிலுள்ள ஒரு கட்டிடக் தளத்தில் செங்கற்களைச் சுமந்து கொண்டிருக்கலாம். நான் என் கதவைத் தாழிட்டுவிட்டு, தியானத்திற்குரிய சரியான ஆசனத்தில் அமர்கிறேன்.*

*என் எண்ணங்கள், கவலைகள் மற்றும் உணர்வுகள் அனைத்தையும் துறந்து அமைதிக்குள், அதாவது உண்மையான ஆன்மாவின் (Self) பேரொளிக்குள் மூழ்குகிறேன். என்ன ஒரு விசித்திரமான உணர்வு! வெளி உலகம் படிப்படியாக மறைவதே பேரானந்தத்தைக் கொண்டுவர போதுமானதாக இருக்கிறது. இந்த ஆரம்பக் கட்டத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்த*

உயர் நிலைகள் வராவிட்டாலும் கூட, இதுவே ஒரு வகையான சொர்க்கம்தான். ஆனால், இது வெளி முற்றம் மட்டுமே. ஆயினும், இந்த வெளி முற்றத்தை அடைவதற்கே எனக்கு முப்பது ஆண்டுகாலத் தேடல் தேவைப்பட்டது.

மனதின் தரப்பிலிருந்து சில குறுக்கீடுகள் தொடங்குகின்றன: 'செய்ய வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன; பல உரையாடல்கள், முடிக்கப்பட வேண்டிய கடிதங்கள், மெட்ராஸிற்கு அனுப்ப வேண்டிய ஒரு தந்தி, மற்றும் இதுவும் அதுவும்...' என்று அது சொல்கிறது. ஆனால் இந்த முறை அதை அமைதிப்படுத்துவதற்கு எந்தப் போராட்டமும் முயற்சியும் தேவைப்படவில்லை. இந்த அற்பமான விஷயங்களில் யாருக்கு ஆர்வம் இருக்கிறது? நான் இவற்றை அலட்சியப்படுத்தும்போது, என்னை விடப் பெரியவர் ஒருவர் இவற்றை கவனித்துக் கொள்ள மாட்டாரா? எண்ணங்கள் மீதான எனது ஆர்வம் குறையும்போது, அவை தங்களுக்குத் தாங்களாகவே மறைந்துவிடுகின்றன.

நான் இப்போது எல்லையற்ற 'வெளியில்' (space) பறக்கிறேன். அது விசித்திரமான அமைதியுடனும் வெறுமையுடனும் இருக்கிறது; ஆயினும் தீவிரமான உயிர்ச்சக்தியால் துடிக்கிறது. இல்லை, வார்த்தைகளால் அடக்க முடியாததை வார்த்தைகளில் விவரிக்க முயன்று நான் தவறு செய்கிறேன். ஏனென்றால், உண்மையில் நான் எந்த இயக்கத்தையும் உணரவில்லை; மாறாக 'இந்த அனைத்தும்' என் வழியே பாய்கிறது, நான் வெறும் சாட்சியாக மட்டுமே இருக்கிறேன். அடுத்த கட்டத்தில் நான் எனது ஆளுமையை (அகந்தையை), அதன் பெயர், வடிவம், நிலை ஆகியவற்றை முற்றிலும் மறந்துவிடுகிறேன்; தனிப்பட்ட 'நான்' என்ற உணர்வு தொலைந்துபோகிறது. எனது விழிப்புணர்வின் இந்த

எளிய ‘மையப்புள்ளி’ வழியாக எவ்வளவு அதிக வெளிச்சம் கடந்து செல்ல முடிகிறதோ, அவ்வளவு குறைவாகவே உலகத்தோடு என்னை பிணைக்கும் கட்டுகளை நான் உணர்கிறேன். இருப்பினும், இந்தப் பறத்தலில் நான் சற்று நின்று, எண்ணங்கள் ஏதுமின்றி, ‘மாயை’ என்ற பருப்பொருள் மற்றும் வடிவத்தின் மாயையோடு என்னை இன்னும் பிணைத்திருப்பது எது, நான் இன்னும் எதைக் கைவிட வேண்டும் என்று வினவ முடிகிறது. ஆனால் அந்த அளப்பரிய அமைதி, இந்த அவதானிப்புகளின் எந்தவொரு வெளிப்படையான விசாரணைத் தன்மையையும் பறித்து, அவற்றை முழுமையுடன் ஒன்றிணையும் ஒரு செயல்முறையாக மாற்றுகிறது.

இந்த ‘வெளி’ விசித்திரமானது; இது சாத்தியமான அனைத்து பௌதிக வெளிகளின் உள்பக்கத்தைப் போன்றது. எனவே, இந்த ‘உள்’ வெளியில் பறப்பதன் மூலம், நம் மூளையின் நுண்குழாய்களில் உள்ள இரத்த அணுவிற்கு எவ்வளவு அருகில் இருக்க முடியுமோ, அவ்வளவு அருகில் மிகத் தொலைவில் உள்ள நட்சத்திரத்திற்கும் இருக்க முடியும். இத்தகைய அமானுஷ்ய (*transcendental*) அனுபவங்களைக் கடந்து செல்ல ஒரு நிபந்தனை அவசியம் — அது மனதின் செயல்பாடுகளை, அதாவது அனைத்து எண்ணங்களையும், நம் விருப்பப்படி கட்டுப்படுத்தும் மற்றும் நிறுத்தும் திறன் ஆகும்.

‘இங்கே’ பிரகாசிக்கும் அந்த ஊடுருவும் பேரொளி, எண்ணங்களின் தன்மையை நான் இன்னும் முழுமையாக உணரவில்லை என்பதைக் காட்டுகிறது. குருநாதரின் போதனைகளிலிருந்து அவற்றை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை மட்டுமே நான் அறிவேன்; நடைமுறை ரீதியாகப் பார்த்தால் கட்டுப்பாட்டை அடைவதற்கு அதுவே போதுமானது.

*இந்த எண்ணத் துளிகளைக் கவனித்து முடித்த வேளையில், கதவைத் தட்டும் சத்தம் என்னை மீண்டும் எனது சாதாரண விழிப்புணர்வுக்குக் கொண்டு வருகிறது. அது காய்ந்த துண்டுகளைக் (Towels) கொண்டு வரும் வேலைக்காரப் பெண். இப்போது மதியமாகிவிட்டது என்றும், அவள் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு எனக்கான உணவைக் கொண்டுவர வேண்டும் என்றும் தமிழில் எனக்கு விளக்க முயல்கிறாள். மேலும், ஒரு புன்னகையோடு என் அலமாரியை ஆசையோடு பார்க்கிறாள்; அங்குள்ள அழகான வாழைப்பழங்கள் அவளைக் கவர்ந்து கொண்டிருக்கின்றன. நான் சம்மதித்தால், இந்தச் சுவையான பழத்தையே அவளது உணவாகக் கொண்டு அவள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவாள். ஆனால், நெய் கலந்த சாதத்தை நன்றாகச் சாப்பிட்ட பிறகே பழங்களைச் சாப்பிட வேண்டும் என்று அவளுக்குப் புரிய வைக்க முயல்கிறேன்.*

*இருப்பினும், நான் புறப்படும் நேரம் வரை அவளை என்னால் சமாதானப்படுத்தவே முடியவில்லை.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2026

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 28 | செவ்வாய் | காலை 7:27 | 29 | புதன் | காலை 8:54 |
| ஆகஸ்ட் | 27 | வியாழன் | காலை 9:46 | 28 | வெள்ளி | காலை 10:22 |
| செப்டம்பர் | 25 | வெள்ளி | காலை 11:06 | 26 | சனி | காலை 10:44 |
| அக்டோபர் | 25 | ஞாயிறு | காலை 11:25 | 26 | திங்கள் | காலை 10:09 |
| நவம்பர் | 23 | திங்கள் | காலை 11:00 | 24 | செவ்வாய் | காலை 09:00 |
| டிசம்பர் | 23 | புதன் | காலை 9:57 | 24 | வியாழன் | காலை 07:40 |



# சாந்தியும் விசாரமும்

## மோட்சத்திற்கான மூன்றாம் மற்றும் நான்காம் வாயிற்காப்பாளர்கள்


### வேங்கட் S. ரமணன்


*[ஸ்ரீ ரமணாஸ்ரம ஆங்கில காலாண்டு இதழான 'தி மவுண்டன் பாத்' (The Mountain Path), ஏப்ரல் 2026 இதழ் தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு.]*

*பகவானால் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் அத்வைத ஞான நூலான யோக வாசிஷ்டத்தில், வசிஷ்ட முனிவர் ராமனிடம் கூறுகிறார்: "விடுதலை என்னும் பேரரசின் நுழைவாயிலில் நான்கு வாயிற்காப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் சாந்தி (புலனடக்கம் அல்லது மன அமைதி), விசாரம் (விசாரணை உணர்வு), சந்தோஷம் (மனநிறைவு) மற்றும் சத்சங்கம் (நல்லோர் சேர்க்கை). விவேகமுள்ள சாதகன் இவர்களது நட்பை அல்லது இவர்களில் ஒருவரது நட்பையாவது விடாமுயற்சியுடன் வளர்த்துக்கொள்ள வேண்டும்."*

*எனது முந்தைய தலையங்கங்களில், சந்தோஷம் (மனநிறைவு) மற்றும் சத்சங்கம் (நல்லோர் சேர்க்கை) ஆகியவற்றின் பயிற்சி குறித்தும், ஆன்மிகப் பயிற்சியில் அவை வகிக்கும் முக்கியப் பங்கு குறித்தும் நான் சிந்தித்தேன். இந்தத் தலையங்கத்தில், மற்ற இரண்டு வாயிற்காப்பாளர்களான சாந்தி மற்றும் விசாரம் பக்கம் திரும்புகிறேன்.*

### *பகவானின் வார்த்தைகளில் சாந்தியும் விசாரமும்*

*'நான் யார்?' நூலில், ஆத்ம ஞானத்தைப் பெறுவதற்கு முதலில் மன அமைதி (மனோநிக்ரகம்) அவசியம் என்பதைப் பகவான் தெளிவான விளக்கத்துடன்*

கூறுகிறார். மனம் இவ்வாறு அமைதியடையும் போது மட்டுமே அது ஒருமுகப்பட முடியும்; அத்தகைய மனமே விசாரணைக்கு தகுதியானது. விசாரணையின் மூலம் மனம் இறுதியில் கரைந்து போகிறது (மனோநாசம்), அதுவே மோட்சம் அல்லது விடுதலை தவிர வேறில்லை.

பகவான் காட்டும் வழிமுறை வரிசைக்கிரமமானது. அலைபாயும் மனதை அமைதிப்படுத்த உதவ, மூச்சுக்கட்டுப்பாடு (பிராணாயாமம்), இறை உருவ தியானம், மந்திர ஜபம் மற்றும் உணவுக்கட்டுப்பாடு போன்ற பல்வேறு ஆயத்தப் பயிற்சிகளை அவர் பரிந்துரைத்தார். இந்தப் பயிற்சிகள் அமைதியையும் கவனத்தையும் வளர்க்க உதவுகின்றன. இருப்பினும், அமைதி என்பது மட்டுமே இலக்கல்ல என்று பகவான் தொடர்ந்து எச்சரித்தார். விசாரணை இன்றி மனம் தற்காலிகமாக ஒடுங்கலாம், ஆனால் அது விரைவிலோ அல்லது காலதாமதமாகவோ மீண்டும் தனது வெளிநோக்கிய இயக்கத்தைத் தொடங்கும்.

இதன் காரணமாகவே, மனதை முழுமையாக அமைதியுறச் செய்யவும், இறுதியில் அதனை அழிக்கவும் சாந்தியானது விசாரத்தில் முடிய வேண்டும் என்று பகவான் வலியுறுத்தினார். “மனதை அமைதிப்படுத்த வேறு வழிகள் இல்லையா?” என்று கேட்டபோது, “விசாரத்தைத் தவிர வேறு தகுந்த வழிகள் இல்லை,” என்று அவரது பதில் திட்டவட்டமாக இருந்தது.

விசாரம் என்பது பரவலாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. இதற்கான தெளிவான விளக்கம் பகவானிடமிருந்தே வருகிறது, ஏனெனில் விசாரம் என்பது அவரது போதனையின் இதயப் பகுதியாக இருப்பதால், அவர் அதில் தனித்துவமான அதிகாரத்தைக் கொண்டுள்ளார். “‘நான் யார்?’ என்னும் விசாரமே அது. ‘நான் யார்?’ என்னும் எண்ணம் மற்ற எல்லா

எண்ணங்களையும் அழித்து, சுடுகாட்டில் பிணத்தைச் சுட்டெரிக்கப் பயன்படும் தடி முடிவில் தானும் அழிவது போல, அந்த எண்ணமும் முடிவில் அழிந்துவிடும். பிறகு ஆத்ம தரிசனம் உண்டாகும். மற்ற எண்ணங்கள் எழும்போது அவற்றைத் தொடராமல், 'இது யாருக்கு எழுந்தது?' என்று விசாரிக்க வேண்டும். எத்தனை எண்ணங்கள் எழுந்தாலும் கவலையில்லை. ஒவ்வொன்றாக எழும்போது, 'இது யாருக்கு எழுந்தது?' என்று விடாமுயற்சியுடன் வினவினால், 'எனக்கு' என்று பதில் வரும். அதன்பின் 'நான் யார்?' என்று விசாரித்தால், மனம் தனது இருப்பிடத்திற்குத் திரும்பும்; எழுந்த எண்ணம் அடங்கும். இப்படியே பழகப் பழக, மனம் தனது மூலத்தில் நிலைபெறும் ஆற்றலை (திறனை) வளர்த்துக்கொள்ளும்." என்று பகவான் விளக்குகிறார்.

பகவானின் போதனையில் விசாரம் மையமாக இருப்பதால், அதன் பயிற்சியை அன்றாட வாழ்வில் எவ்வாறு கொண்டு வருவது என்பதை பின்னர் ஆராயலாம்.

### பேரின்பத்திற்கான வழி

கவனத்தை வளர்ப்பதில் சாந்தியின் மதிப்பு உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு துறையிலும் வெற்றி என்பது ஒழுக்கமான, சுயக்கட்டுப்பாடுள்ள மனதையே சார்ந்துள்ளது. சோதனைகளை எதிர்ப்பது, புலன்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் ஒழுக்கத்தைப் பயிற்சி செய்வது ஆகியவை அவசியமானவை. உதாரணமாக, ஒரு வெற்றிகரமான விளையாட்டு வீரரோ அல்லது விஞ்ஞானியோ கற்றல், கண்டுபிடிப்பு, ஆரோக்கியம், அர்த்தமுள்ள வேலை மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் உயர்ந்த மகிழ்ச்சியை அடைய சாதாரண இன்பங்களைத் தியாகம் செய்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், அவர்கள் தகுதியான வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

ஆன்மிகச் சாதகருக்கு, சுயக்கட்டுப்பாடு இன்னும் ஆழமாகச் செல்கிறது: மனதைப் புலன்களிலிருந்து தடுத்து, அதை இறைவனிடம் ஒருமுகமாக நிலைநிறுத்துவதாகும். பகவான் பரிந்துரைத்த பயிற்சிகள் — மிதமான சாத்வீக உணவு, ஜபம், பிராணாயாமம் மற்றும் தியானம் — மனதை வலுப்படுத்துகின்றன, இதனால் அது உள்நோக்கித் திரும்பி, புலன் பதிவுகளின் இழுப்புகளுக்கு மத்தியிலும் நிலையாக இருக்க முடியும். இதன் விளைவு ஆழமான அமைதி, ஆழ்ந்த சாந்தி மற்றும் அமைதியான மகிழ்ச்சி. உலகியல் இன்பங்களுக்கு அப்பாற்பட்டு எல்லையற்ற பெரிய மகிழ்ச்சி ஒன்று இருப்பதை உணர்வதே இந்தப் பாதையில் ஒரு திருப்புமுனையாகும்.

ஆனால் அத்தகைய சுயக்கட்டுப்பாடு விசாரத்துடன் இணையும்போது, பலன்கள் பன்மடங்காகின்றன. மனோநாசம் கற்பனைக்கு எட்டாத மிக உயர்ந்த மாசற்ற இன்பத்திற்கு இட்டுச் செல்கிறது. தைத்திரீய உபநிடதம் மிக உயர்ந்த மனித மகிழ்ச்சியில் தொடங்குகிறது: பூரண ஆரோக்கியம், மாறாத இளமை, முழுமையான கல்வி, உலகளாவிய புகழ் மற்றும் நிறைவேறிய ஆசைகள். இந்த அடிப்படையிலிருந்து, பேரின்பமானது ஒவ்வொரு நிலையிலும் நூறு மடங்கு விரிவடைகிறது: முதலில் கந்தர்வர்களின் இன்பம், பின்னர் தேவர்கள், அதைத் தொடர்ந்து இந்திரன், பிரகஸ்பதி மற்றும் பிரஜாபதி. இவற்றுக்கும் அப்பாற்பட்டு பிரம்மத்தின் பேரின்பம் (பிரம்மானந்தம்) உள்ளது—அது எல்லையற்றது மற்றும் கணக்கிற்கு அப்பாற்பட்டது.

இந்த வரிசைமுறையின் மூலம், உபநிடதம் சாதகரை உலகியல் இன்பத்திற்கு அப்பால் பரம சத்தியத்திற்கு வழிநடத்துகிறது: அதுவே மிக உயர்ந்த ஆனந்தம் — பிரம்மானந்தம். இது பெறப்பட வேண்டிய ஒன்றல்ல, மாறாக குருவின் அருளால் வெளிப்படுத்தப்படும் ஆத்மாவின் இயல்பே ஆகும்.

இது வெறும் கோட்பாடு அல்ல. பகவான் தாமே இந்த இன்பத்தின் வடிவமாகத் திகழ்ந்தார், இப்போதும் இங்கேயும் அணுகக்கூடிய மாசற்ற மகிழ்ச்சியின் வற்றாத நீரோட்டத்தை எவ்வாறு அடைவது என்பதை நமக்குக் காட்டினார்.

*அன்றாட வாழ்வில் சாந்தி மற்றும் விசாரப் பயிற்சி*

*சாந்தி*

பகவத் கீதையின் 6ஆம் அத்தியாயத்தின் 25வது ஸ்லோகத்தில் கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார்: "உலக எண்ணங்களால் எழும் அனைத்து ஆசைகளையும் முற்றிலுமாகத் துறந்து, மனதினால் புலன்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் அடக்க வேண்டும். மெல்ல மெல்லவும் சீராகவும், புத்தியின் உறுதியால் மனம் இறைவனில் மட்டும் நிலைபெற்று, வேறொன்றையும் நினைக்காது இருக்கும்."

26வது ஸ்லோகத்தில் அவர்: "அலைபாயும் மற்றும் நிலையற்ற மனம் எப்போதெல்லாம் எங்கே அலைகிறதோ, அப்போதெல்லாம் அதைத் திருப்பி இழுத்து வந்து தொடர்ந்து இறைவனிடம் நிலைநிறுத்த வேண்டும்." என்று கூறுகிறார்.

பகவான் இந்த ஸ்லோகங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவை சாந்தி பயிற்சியின் சாரத்தைப் பிரதிபலிக்கின்றன.

அழகான ஒரு பொருளை நாம் சந்தித்து அதை அடைய வேண்டும் என்ற ஆசை எழும்போது, நாம் உணர்வுப்பூர்வமாக மனதை விலக்கிக் கொண்டு அந்தத் தவிப்பை அடங்கிட அனுமதிக்க வேண்டும். அந்தப் பொருள் நிலையற்றது என்றும் அது நீடித்த மகிழ்ச்சியைத் தர முடியாது என்றும் புரிந்துகொள்வது அவசியம் — இதுவே வைராக்கியம் (பற்றற்ற நிலை). ஒரு பெரிய மாளிகை, அழகான ஆடை, பதவி உயர்வு அல்லது

*கவிஞராக அங்கீகாரம் பெறுதல் போன்ற நீண்டகால ஏக்கங்கள் அனைத்தும் ஆன்மிக இலக்கிலிருந்து நம்மை மெதுவாக இழுத்துச் செல்லக்கூடிய ஆசைகளே. சீரான, ஒருமுகப்பட்ட பயிற்சியின் மூலம், மனதின் மீதான அவற்றின் பிடியை நாம் படிப்படியாகத் தளர்த்தலாம்.*

*மற்றொரு பயனுள்ள அணுகுமுறை என்னவென்றால், அனைத்துப் பொருட்களையும் ஆத்மாவின் வெளிப்பாடுகளாகப் பார்ப்பது, இது பற்றின் தீவிரத்தைக் குறைக்கும். இன்னொன்று, அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைப்பது, வாழ்க்கையில் வருவதை நமது செயல்களின் பலனாக, அவனது பிரசாதமாக ஏற்றுக்கொள்வது. எல்லா அணுகுமுறைகளிலும், புலன்களின் பற்றால் ஏற்படும் தீவிரமான வேகம் படிப்படியாகக் குறைந்து, மனம் அமைதியாகிறது.*

*நாம் மெதுவாகவும் பொறுமையாகவும் செயல்பட அறிவுறுத்தப்படுகிறோம்.*

*விசாரம்*

*ஆத்ம விசாரணை என்னும் பழங்கால வழியை நவீன வாழ்வின் சூழலுக்கு ஏற்ப மீட்டெடுத்துப் பொருத்தியமைப்பதே பகவானின் வருகையின் நோக்கமாகும். முற்காலத்தில், இந்த வழி உலகைத் துறந்து தனிமையில் தியானத்தில் மூழ்கியிருக்கும் வீர சாதகர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில், அத்தகைய வாழ்க்கை முறை அரிதாகிவிட்டது.*

*பகவான் இந்த வழியை ஒரு உயிருள்ள வடிவத்தில் மீண்டும் மலரச் செய்தார், அதை கர்ம யோகத்துடன் ஒருங்கிணைத்தார், இதனால் அன்றாட வாழ்வின் பொறுப்புகளுக்கு மத்தியிலும் இதைப் பயிற்சி செய்யலாம். இதற்குச் சடங்குகள், வெளிப்புற ஆசாரங்கள் அல்லது வேலையைத் துறப்பது*

போன்றவை தேவையில்லை என்பதால், இது நமது காலத்திற்கு மிகவும் பொருத்தமானது.

இருப்பினும், விசாரத்தைப் பயிற்சி செய்வது எப்படி என்பதில் அதிகக் குழப்பம் உள்ளது. பகவான் கற்பித்த பயிற்சியின் எளிய மற்றும் உண்மையான விளக்கம் இதோ:

முதலாவதாக, நாம் 'நான்' என்னும் எண்ணத்தின் மீது கவனத்தைக் கொண்டு வருகிறோம். பகவான் கற்பித்தபடி, அகந்தை என்பது எண்ணங்களின் தொகுப்பே அன்றி வேறில்லை, அதன் வேரில் இந்த அடிப்படை 'நான்' எண்ணம் உள்ளது. ஆழ்ந்த உறக்கத்தில், நாம் அகந்தை மற்றும் எண்ணங்களிலிருந்து விடுபட்டிருக்கும்போது, அங்கு பேரின்பமும் அமைதியும் நிலவுகிறது; மிகச் சிறந்த துயரம் கூட அந்த நிலையில் நம்மைத் தொட முடியாது. விழித்தெழுந்தவுடன், முதலில் எழும் எண்ணம் 'நான்' எண்ணம் — அதிலிருந்தே நாம் நம்மை அடையாளப்படுத்துகிறோம்: "நான் ஒரு மருத்துவர்", "நான் இந்தியாவில் இருக்கிறேன்", "எனது கால் வலிக்கிறது" இவ்வாறு பல எண்ணங்கள். விழிப்பு நிலையில் உள்ள அனைத்து எண்ணங்களும் இந்த முதன்மையான 'நான்' உணர்வில் வேரூன்றியுள்ளன.

சத்தர்சனம், 26வது ஸ்லோகத்தில் பகவான் கூறுகிறார்: "'நான்' என்னும் எண்ணம் எழும்போது, அதனுடன் அனைத்தும் எழுகின்றன. அது எழாதபோது, வேறொன்றும் இல்லை."

இரண்டாவதாக, இந்த 'நான்' எண்ணத்தின் தன்மையை நாம் ஆராய்கிறோம். உபதேச உந்தியார், 18வது ஸ்லோகத்தில் பகவான் கூறுவது போல்: "எண்ணங்களே மனமாக அமைகின்றன; எல்லா எண்ணங்களிலும் 'நான்' எண்ணமே மூலமாகும். மனம் என்று அழைக்கப்படுவது 'நான்' என்னும் நினைப்பே."

மேலும், "உருவைப் பற்றி அது எழுகிறது; உருவைப் பற்றி அது நிலைக்கிறது; உருவைப் பற்றிப் புசித்து அது வளர்கிறது. ஒரு உருவை விட்டு மற்றொன்றைப் பற்றுகிறது," என்று பகவான் சத்தர்சனம், 25வது ஸ்லோகத்தில் கூறுகிறார்.

இவ்வாறு, 'நான்' எண்ணம் சுதந்திரமாக இருக்க முடியாது; அது ஏதேனும் ஒரு அடையாளத்தைச் சார்ந்தே இருக்க வேண்டும். "மருத்துவர்", "இந்தியா" மற்றும் "கால்" போன்றவற்றை நாம் நீக்கிவிட்டால், 'நான்' எண்ணத்திற்குப் பற்றுவதற்கு எதுவுமில்லை. இது பயிற்சிக்கு ஒரு முக்கியக் குறிப்பை வழங்குகிறது: 'நான்' எண்ணத்திற்கு அதன் ஆதாரங்களை வழங்காமல், எண்ணங்களுக்குக் கீழே உணரப்படும் 'நான்' என்ற உணர்வின் பக்கம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

மூன்றாவதாக, நாம் 'நான்' எண்ணத்தைப் பிரித்து அதன் எழுச்சியைக் கவனிக்கிறோம். அதனுடன் இருக்கும் உடனடித் தன்மையுடன், அதற்கு விளக்கம் கொடுக்கும் முன் தங்கியிருக்க வேண்டும், இறுதியில் அது ஒரு சுதந்திரமான இருப்பு இல்லை என்பதைக் கண்டறிய வேண்டும். எஞ்சியிருப்பது எண்ணமற்ற தூய "நான்அறிவு". உபதேச உந்தியார், 17வது ஸ்லோகத்தில் பகவான், "மனமானது தனது சொந்த உருவை இடைவிடாது ஆராயும்போது, மனம் என்று ஒன்று இல்லவே இல்லை என்பதைக் காணும். இது அனைவருக்கும் திறந்திருக்கும் நேரடிப் பாதையாகும்." என்று அறிவிக்கிறார்.

இது ஒரு புரட்சிகரமான அறிவிப்பாகும், இது பகவானின் போதனையின் தீவிர எளிமையை வெளிப்படுத்துகிறது: நாம் பொதுவாகக் கருதும் மனமும், நாம் வழக்கமாக அடையாளம் காணும் 'நான்' என்பதும் உண்மையான எதார்த்தம் அல்ல.

நான்காவதாக, இந்த போலியான 'நான்' எண்ணத்தின் மூலத்தைத் தேடுகிறோம். பகவானின் "நான் யார்?" என்ற கேள்வி, உண்மையில் இந்த 'நான்' எங்கிருந்து எழுகிறது என்பதைக் கண்டறிய உள்நோக்கித் திரும்புவதாகும். அவர் உபதேச உந்தியார், 19வது ஸ்லோகத்தில் கூறுவது போல்: "ஒருவன் உள்நோக்கித் திரும்பி இந்த 'நான்' எண்ணம் எங்கிருந்து எழுகிறது என்று தேடும்போது, 'நான்' மறைகிறது மற்றும் ஞானத்தேடல் தொடங்குகிறது."

சத்தர்சனம், 29வது ஸ்லோகத்தில் அவர் மேலும் தெளிவுபடுத்துகிறார்: "'நான்' என்று பேசுவதை நிறுத்திவிட்டு, உள்நோக்கி மூழ்கும் மனதோடு 'நான்' எண்ணம் எங்கிருந்து முளைக்கிறது என்று தேடுங்கள். இதுவே ஞானத்தின் வழி. அதற்குப் பதிலாக 'நான் இதுவல்ல, அதுவாக இருக்கிறேன்' என்று நினைப்பது தேடலுக்கு உதவியாக இருக்கலாம், ஆனால் அதுவே விசாரணை ஆகாது."

விசாரமானது வெறும் வாய்மொழி சார்ந்ததாகவோ அல்லது கருத்து சார்ந்ததாகவோ இருக்குமேயானால், அது முழுமையான விசாரணையாகாது; அந்த விசாரணை, 'இருப்பு' என்ற உணர்வோடு ஒன்றிப்போவதில் முடிய வேண்டும். 'நான்' எண்ணத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டாலும், விசாரம் என்பது ஆத்மாவைப் பற்றி சிந்திக்கும் செயல்முறை அல்ல, மாறாக 'நான்' என்பதற்கு அடியில் உள்ள இந்த இருப்பு உணர்வின்மீது கவனத்தை மாற்றுவதாகும். இந்த இடத்தில், விசாரணை என்பது ஒரு கேள்வியாகச் செயல்படுவதை நிறுத்திவிட்டு, கருத்துருவாக்கம் மற்றும் விவாத எண்ணச் செயல்முறைகளில் சிக்கியிருக்காமல், இருப்பு என்ற உயிருள்ள நீரோட்டத்தில் சொல்லற்ற முறையில் மூழ்கிவிடுவதாக மாறுகிறது.

இறுதியாக, நாம் மூலத்தைக் கண்டறிகிறோம், அதுவே ஆன்மிக இதயம், அதில் ஒன்றுகிறோம்.

அடுத்த ஸ்லோகத்திலேயே (சத்தர்சனம், ஸ்லோகம் 30), பகவான் கூறுகிறார்: "மனம் 'நான் யார்' என்று தேடி உள்நோக்கித் திரும்பி இதயத்தில் ஒடுங்கும்போது, 'நான்' என்பது தலைகுனிந்து மறைகிறது மற்றும் ஒரே 'நான்' தானாகத் தோன்றுகிறது. அது 'நான்–நான்' என்று தோன்றினாலும், அது அகந்தை அல்ல. அதுவே உண்மை, பூரணம், ஆத்மாவின் சாராம்சம்."

இதுவே இறுதி நிறைவு, இதயம் அல்லது ஆன்மிக இதயத்தில் மனம் ஒன்றிவிடுதல், இதற்கு குருவின் அருள் இன்றியமையாதது. அருளின் அமைதியான செயல்பாட்டிற்காகக் காத்திருக்கும் அதே வேளையில், நேர்மை, பொறுமை மற்றும் பணிவுடன் நாம் நமது பகுதியை ஆர்வத்துடன் செய்து இந்தப் பாதையில் நடக்க வேண்டும்.

குருவின் அருளால், மனம் அதன் மூலத்தில் ஓய்வெடுக்கிறது, ஆத்மாவை வெளிப்படுத்துகிறது—அதுவே சச்சிதானந்தம், பிரம்மம், நித்திய அறிவு மற்றும் தடையற்ற அமைதி. சாந்தி, விசாரம், சந்தோஷம் மற்றும் சத்சங்கம் ஆகிய நான்கு வாயிற்காப்பாளர்களைத் தழுவிக்கொள்வதன் மூலம், நாம் மிக உயர்ந்த விடுதலையான மோட்சத்திற்கு வழிநடத்தப்படுகிறோம். இந்தப் பாதையில் நடப்பதன் மூலம், மகிழ்ச்சி எல்லையற்றதாகவும், இதயம் எப்போதும் நமக்கே உரிய அமைதியான இல்லத்தில் ஓய்வெடுக்கும் நமது சொந்த இருப்பின் நித்திய சத்தியத்திற்கு நாம் விழித்தெழுகிறோம்.

பணிவுடனும் பக்தியுடனும்,

வேங்கட் சு. ரமணன்

# வேதம் காட்டும் வாழ்க்கை நெறி

## டாக்டர் அபிநவம் ராஜகோபாலன்

*எந்த ஒரு கருத்தையும் உரையாடல் மூலம் விளக்குவதை தொன்றுதொட்டு இந்திய நூல்களில் பார்க்கலாம். உபநிஷதங்கள், பாரதம், புராணங்கள், நீதி இலக்கியங்கள் போன்ற அனைத்திலும் இந்த முறை பின்பற்றப் பட்டது.*

*இது பற்றி ஆசிரியர் டாக்டர் ராம்மோஹனிடம் சில ஆண்டுகளுக்கு முன் பேசினேன். அவர் 'நம் சித்தாந்தத்தில் மட்டுமில்லை. பௌத்தம், கிரேக்கம் போன்ற பலவற்றிலும் இந்த அமைப்பைப் பார்க்கலாம். இது கடினமான விஷயங்களையும் சுலபமான முறையில் அனைவரிடமும் கொண்டு சேர்க்க நல்ல உத்தி.' என்று பல உதாரணங்களுடன் எடுத்துரைத்தார். குறிப்பாக "மிலிந்த பன்ஹா" என்னும் பௌத்த நூலில் மிலிந்தன் என்னும் இந்தோ—கிரேக்க மன்னனுக்கும் நாகசேனர் என்னும் துறவிக்கும் நடக்கும் உரையாடலை நயம்பட விளக்கினார்.*

*'நம்முடைய வேதங்களில் இன்றைய வாழ்க்கைக்குத் தேவையான சுவையான பல கருத்துகள் இருக்கின்றன. அவற்றை இந்த முறையில் விளக்கலாமா?' என்று கேட்டேன்.*

*'நல்ல விஷயம். முயற்சி செய்யுங்களேன். சரளமான வழக்கு நடையில் எழுதுங்கள்.' என்று சொன்னார்.*

*'சரி' என்று தலையாட்டிவிட்டேன். சில ஆண்டுகள் வேறு முயற்சிகளில் கடந்து போயின. பின்னர் வேதங்களைத் தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தபோதுதான், அதில் எத்தனை அரிய கருத்துகள் உள்ளன என்று தெரிந்தது. பெரும்பாலும் கர்ம மார்க்கத்தையே வலியுருத்தும் வேதங்களில் நம் அன்றாட வாழ்க்கை குறித்த நுண்ணிய கருத்துகள் பல உள்ளன. அவை நம்மை நல்வழிப்படுத்தி ஆன்மிகப் பாதையில் மடைமாற்றம் செய்யக் கூடியவை. இவற்றில் உள்ள உயர்ந்த வேதாந்தக் கருத்துகள் பின்னர்*

*உபநிஷதங்களில் கையாளப்பட்டன. இறை சித்தாந்தம், பிரபஞ்ச அறிவு, சுற்றுச்சூழல், குடும்ப வாழ்க்கை, நட்பு, வீரம், பெண்ணியம்..... என்று சொல்லிக் கொண்டே போகலாம்.*

*இவற்றை ஒரு அறிஞருக்கும் சில சம்சாரிகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல் பாணியில் விளக்குவதே இந்தத் தொடரின் நோக்கம்.*

## அத்தியாயம் – 1 நட்புக் கண்ணோட்டம்

“அவந்திகா” அடுக்கு மாடிக் கட்டிடத்தின் காம்பௌண்டை சுற்றியுள்ள பெஞ்சுகளில் அந்த குடியிருப்புவாசிகள் சிலர் அமர்ந்திருந்தனர். நேரம் மாலை ஆறு மணியிருக்கும். அவர்கள் இதுவரை பார்த்திராத ஒருவர் அவர்களை நோக்கி வந்தார். அறுபது வயதிருக்கும். நட்பைத் தேடும் கண்கள். கம்பீரமான தோற்றம். ‘குட் ஈவ்னிங். என் பெயர் வித்யாசாகர். ஏ7 பிளாட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருக்கிறேன்.’ என்றார்.

‘வாருங்கள். “அவந்திகா” குடும்பத்திற்கு உங்களை வரவேற்கிறோம். நான்தான் இந்த குடியிருப்பு அசோசியேஷனின் தலைவன். பெயர் தேவதேவன். நாங்கள் இங்கு தினமும் மாலையில் மீட் பண்ணுவோம். அரட்டை அடிப்போம். அரசியல் சினிமா, சாப்பாடு எல்லாம் பற்றிப் பேசுவோம். நீங்கள் என்ன செய்கிறீர்கள்?’

‘நான் ரிடையர்ட் ப்ரொபெசர். இந்திய நாகரிகம், வேதங்கள் பற்றி இந்தியாவிலும் வெளி நாட்டிலும் சில யூனிவர்ஸிடிகளில் வேலை செய்து ஓய்வு பெற்றேன். இப்பொழுது பேக் டு இண்டியா. சென்னை என் சொந்த ஊர்.’

‘அப்படியா. சந்தோஷம்..... ஆனால் ஒரு சந்தேகம்.’ வேலுசாமி கேட்டார்.

‘எதுவானாலும் கேளுங்கள்.’

'தப்பாக நினைக்காதீர்கள்.. எங்களைப் பொருத்தவரை வீட்டுல எதாவது விசேஷம்னாக்கா ஐயர் வருவார். மந்தரம் சொல்லுவார். அதைத் தவிர வேதத்துக்கு வெளிநாட்டுக் காலேஜுல சொல்லித்தர அளவுக்கு என்ன விசேஷம் இருக்கு?"

வித்யாசாகர் லேசான புன்முறுவலுடன் சொன்னார், "நிறைய இருக்கு வேதத்துல. நீங்க ஆசைப்பட்டா சொல்றேன்."

"சொல்லுங்களேன். வழக்கமான வம்புப் பேச்சுக்குப் பதிலாக ஒரு சேஞ்ச் ஆக இருக்கும்."

வித்யாசாகர் சொன்னார். "முதலில் ஒரு வேத மந்திரத்தின் பொருளைப் பார்ப்போம்,

'அனைவரும் என்னை நட்பு கண்ணோட்டத்துடன் பார்க்கட்டும்;

நான் அனைவரையும் அந்தக் கண்ணோட்டத்திலேயே பார்க்கிறேன்;

அனைவரும் ஒருவரை ஒருவர் நட்புக் கண்ணோட்டத்துடன் பார்ப்போம்.'

அனைவரும் சற்று வியப்புடன் நோக்கினர்.

வித்யாசாகர் விளக்கினார்.

"ஆக்சுவலாப் பாத்திங்கனா, வேதம் ஒரு அழகான உலகத்தை நம் முன்னால் நிறுத்துகிறது. இந்த உலகில் நட்பும் அன்பும் தவிர வேறு எதற்கும் இடமில்லை. இது தனி மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு சமுதாயம் முழுவதுக்கும் பொருந்தும். இந்த மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் இப்பொழுது எங்கு பார்த்தாலும் டென்ஷன், டென்ஷன் என்று கேள்விப்படுகிறோமே, அது முழுக்க நீங்கிவிடும்."

அவர்கள் சற்று சுவாரசியத்துடன் பார்த்தார்கள். அவர் தொடர்ந்தார்

“இந்த அற்புதமான மந்திரம் யஜுர் வேதத்தில் வருகிறது. உங்களுக்குத் தெரியும் ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்று நாலு வேதங்கள் உண்டு. பொதுவாக வேத மந்திரங்கள், வெவ்வேறு தெய்வங்கள் பற்றிய வழிபாடு, பிரார்த்தனை என்கிற முறையில்தான் இருக்கும். ஆனால் அந்த மந்திரங்களின் இடையே பல அரிய விஷயங்கள் வருகின்றன. அவை இந்தக் காலத்துக்கு மிகவும் பொருத்தமானவையும் கூட. குறிப்பாக உலகில் பல பகுதிகளில் நடக்கும் போர்களும் அதனால் விளையும் பாதிப்புகளும் மறைந்து போகும். அதே சமயம் இது பலஹீனமும் இல்லை. எதிராளி தவறிழைத்தால் பதிலடி கொடுப்பதும் வேத தர்மமே.’

தேவதேவன் குறிக்கிட்டார். வேதத்தில் ‘போர், சண்டையெல்லாம் உண்டா?’

‘நிச்சயமாக. ஒரு மந்திரத்தில் போருக்குச் செல்லும் ஒரு வீரன் கேட்கிறான், ‘சக்திமானே, நீயே எனக்குச் சக்தியைக் கொடு. நீயே யுத்தத்தின் ஆக்ரோஷம். எனக்கு நீ ஆக்ரோஷத்தைக் கொடு. வெற்றித் திருமகனே எனக்கு வெற்றியைக் கொடு.’. இது யஜுர் வேதம் 19. 9வது மந்திரம்.’

‘நட்பை விரும்பிய வேதகாலத்து மக்கள், போருக்கும் தயாராகத்தான் இருந்தார்கள் போல.’ தேவதேவன் ஒப்புக் கொண்டார்.

சில கணங்கள் மௌனம்.

‘அதெல்லாம் ஓகே. ஆனால் இது சாத்தியமா? எப்படி எல்லோரையும் நண்பனாகப் பாக்க முடியும்? உலகத்துல பாதி பேரு அயோக்கியனுங்க. சொந்த பந்தங்களையே நம்ப முடியல. இந்தக் காலத்துல.’ சபேசன் குரலில் அவநம்பிக்கை.

“நியாயமான கேள்வி. மனிதர்கள் ஏன் சத்தியம், தர்மம் இவற்றை மீறி நடக்கிறார்கள் என்பதற்கு நம்

சாஸ்திரங்கள் ஆறு எதிரிகளை நம் முன் நிறுத்துகிறார்கள். அவை நமக்குப் பரிச்சயமானவைதான். காமம்தான் முதல் எதிரி. இது ஆசைகளைத் தூண்டி நம்மை செயலாற்ற வைக்கிறது. தடைபட்ட ஆசையே இரண்டாவது எதிரியான க்ரோதம். இந்தக் காமமும் க்ரோதமும்தான் மற்றவர்களைப் பகையாகப் பார்க்கிறது. இந்தத் தீய கூட்டணியின் மற்ற உறுப்பினர்கள் லோபம், மோகம், மதம், மாத்சர்யம் என்பவை.இதன் பலனாகத்தான் நாம் நல்ல எண்ணங்கள், நட்புறவு, போன்ற நேர்மறை எண்ணங்களை இழக்கிறோம். பிறரைக் கண்டால் பொறாமை வருகிறது. இதுவே மாத்சர்யம் எனப்படும்.'

'வேதகாலத்திலும் இந்த ஆறு சக்திகளும் இருந்திருக்கும் அல்லவா?' சபேசன் கேட்டார்.

'இருந்தன. ஆனால், அவை விலக்கத் தக்கவை என்று அவற்றைக் கண்டு அஞ்சி ஒதுங்கினார்கள். நேர்மை தவறியவர்களுக்கு சமுகத்தில் மரியாதை இல்லாமல் இருந்தது. தண்டனையும் அதிகம். அப்போது ஒழுக்கத்துக்கு பெரு மதிப்பு இருந்தது. ஒருவேளை நம்மை அறியாமலே குற்றம் செய்து இருப்போமோ என்ற எண்ணம் கூட வேத மனிதனை வேதனைப் படுத்தியது. வருணபகவானைக் குறித்து ஒரு பிரார்த்தனை, 'ஒருவேளை நான் என்னை விரும்புவோருக்கோ, மற்றும் நண்பன், சகோதரன், அண்டை வீட்டார்கள், ஏன் முன்பின் அறியாத வேற்று மனிதன் ஒருவனுக்கோ தவறு இழைத்திருந்தால். அந்தப் பாவத்திலிருந்து என்னை விடுவித்துவிடு.' ருக் வேதம் 5ஆம் மண்டலம் அத்ரி முனிவரின் குடும்பத்தால் அமைக்கப்பட்ட பகுதி. அதில் இது 85வது சூக்தம். இதில் முன்பின் தெரியாத ஒரு மூன்றாம் மனிதனுக்கு தான் அறியாமல் செய்த பாவங்களுக்குக் கூட மன்னிப்புக் கேட்கிறார் வேத ரிஷி. பாருங்கள், என்ன அற்புதமான கருத்து. இத்தகைய நம்முடைய கலாசார வேர்களையும்

நற்பண்புகளையும் இன்று இழந்து விட்டோம். இதனால் சுயநலம், ஈகோ இவை நம்மை ஆட்கொள்கின்றன.'

உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த தமிழ்ப் பேராசிரியை வித்யாவதி "இதுக்குப் புறநானூறுல அருமையான விளக்கம் இருக்கே. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய கணியன் பூங்குன்றனார் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று தொடர்கிறாரே, அதற்கு என்ன காரணம்? நம் மனப்பான்மைதான்.' என்றாள்.

அதை ஆமோதித்த, வித்யாசாகர் தொடர்ந்தார். 'ரொம்ப சரி. இதற்கு நேரடியான விளக்கமாக அமைந்துள்ளது வேதத்தின் கிளையான மகா உபநிஷத்தில் வரும் வசுதைவ குடும்பகம் என்னும் சுலோகம். இதன் ஆதார நூலைப் பற்றி சில குழப்பங்கள் உண்டு. இந்த உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்னும் இந்தக் கருத்து உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். வசுதா என்றால் நமக்கு எல்லா வளத்தையும் அளிக்கும் இந்த பூமி. அவளையே நாம் பூமித்தாயாக வணங்குகிறோம். உலகின் மக்கள் அனைவரும் அவளுடைய குழந்தைகளே. நாம் அனைவரும் ஒரே குடும்பம். நம்மிடையே ஏற்றத்தாழ்வுகளும் காழ்ப்புணர்ச்சியும் நீங்கி பரஸ்பர அன்புடன் வாழ்வோம். இதில் மற்றொரு சிறப்பு 'ஏவ' என்னும் சொல். இது ஆழமான கருத்தை முன் வைக்கிறது. எனது குடும்பம், என் உற்றார் என ஒரு பக்கம். மற்ற அனைவரும் மறுபக்கம் என்னும் குறுகிய நோக்கத்தை விலக்கி இந்த உலகம் ஒன்றுதான் நம் குடும்பம் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என்னும் தெளிவான அறிவுரையும் பார்க்கலாம். இதன் மூன்று சொற்கள் வசுதா+ஏவ+குடும்பகம் சுலபமாகப் பொருள் விளங்கக் கூடியவை.

'பொருள் புரிகிறது. இது நமது தேசத்தின் பாராளுமன்ற நுழைவாயிலில் காணப்படும் வாசகம் ஆயிற்றே. இதைப் பல மேடைகளில் அறிஞர்கள் பேசிக் கேட்டிருக்கிறேன்.' தேசிகன் சொன்னார்.

ஆமாம். இதன் முழு வடிவம் பார்ப்போமா?

அயம் பந்து ரயமிதி கணனா லகு சேதஸாம்

உதார சரிதானாம் து வசுதைவ குடும்பகம் ||

இதன் கருத்து, குறுகிய மனம் படைத்தவர்கள் 'இவன் என் உற்றான், அவன் மாற்றான்' என்று வேறு படுத்திப் பார்ப்பார்கள். ஆனால் உயர்ந்தவர்கள், உலகம் முழுவதும் என் குலம் என்று ஏற்றுக் கொள்வார்கள். இது மிகச் சிறந்த தத்துவம். இந்த வசனம் ஒன்று போதும் நம்மை எங்கோ கொண்டு செலுத்திவிடும். இந்த மகா உபநிஷதத்தின் பிந்தைய வரிகள் பற்றுகள் நீங்கிய ப்ரம்ம சாக்ஷாத்காரத்தைப் பற்றி பேசுகின்றன. அதற்கு முக்கிய தகுதி இந்த 'வசுதைவ குடும்பகம்' என்னும் அறிவு.' முடித்தார் வித்யாசாகர்.

'தெரிந்த வரிகள்தான். பல அகில இந்திய கூட்டங்களில் இதுதான் 'லோகோ' ஆக இருந்தது. ஆனால் அதன் பின்னால் இத்தனை விஷயம் இருக்குமென்று தெரியாது.' சபேசன்.

"இந்த மனப்பான்மைக்கு விளக்கமாக மகாபாரதத்தில் ஒரு கதை வரும். துரோணாச்சாரியார் ஒரு கட்டளை இடுகிறார், "இன்று மாலைக்குள் ஒரு தீய மனிதனைக் கொண்டு வாருங்கள்" என்று. துரியோதனனும் தருமனும் கிளம்புகிறார்கள். மாலையில் இருவரும் வெறுங்கையுடன் வருகிறார்கள். காரணத்தைக் கேட்கிறார் குரு. துரியோதனன் சொல்கிறான், "ஊரில் இருக்கும் அத்தனை பேரும் அயோக்கியர்கள். அதில் ஒரு கெட்டவன் என்று யாரைக் கொண்டு வருவதாம்?' தருமன் சொன்னான், "எல்லோருமே இங்கு உத்தமர்கள்.

இதில் கெட்டவர் யாருமே இல்லையே. ஆகையால் உங்கள் கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை" ஒரே குடும்பத்தில் பிறந்து ஒரே குருவிடம் பயின்ற இருவருக்குள்ளேயே எத்தனை வேறுபாடு!"

வித்யாசாகர் சொன்ன கதையை அனைவரும் ஆவலுடன் கேட்டனர்.

"உண்மைதான். முக்கியமான ஒரு பாடத்தை நீங்க சொல்லிக் கொடுத்திருக்கிங்க. அந்த முழு வேத மந்திரத்தையும் தெரிஞ்சுக்க ஆசைப்படரோம். கொஞ்சம் சொல்ல முடியுமா?' தேசிகன் கேட்டார்.

வித்யாசாகர் "சொல்கிறேன் கேளுங்கள்,

*மித்ரஸ்ய மா சக்க்ஷுஷா சர்வாணி பூதானி சமீக்ஷந்தாம்.*
*மித்ரஸ்யாஹம் சக்க்ஷுஷா ஸர்வாணி பூதானி ஸமீக்க்ஷே*
*மித்ரஸ்ய சக்ஷுஷா சமீக்க்ஷாமஹே (யஜுர் 36.18)*

இதில் முக்கியமான வரி மித்ரஸ்ய சக்க்ஷுஷா சமீக்ஷாமஹே நட்புக் கண்ணோட்டத்தில் நாம் பரஸ்பரம் நோக்குவோம். என்பது. இந்த மந்திரம் யஜுர் வேதம் 36ஆம் அத்தியாயத்தில் இருக்கிறது. "மித்ரஸ்ய சக்க்ஷு:" என்பதுதான் இதன் சாரம். மித்ரன் என்றால் நண்பன்; சக்க்ஷு என்றால் கண். இதைப் புரிந்து கொண்டால் உலகத்தில் எந்த வித சண்டையும் இருக்காது. நட்பும் உறவும் பெருகும். மித்ரன் என்னும் சொல்லுக்கு சூரியன் என்ற பொருளும் உண்டு. "

வேலுசாமி சொன்னார், "அடேங்கப்பா, வேதத்துல இத்தனை விஷயம் இருக்கா? நீங்க தினம் இங்க வாங்க. எதாவது நல்ல விஷயமா சொல்லுங்க."

மற்றவர்கள் அதை உற்சாகமாக வரவேற்றனர்.

'இதில் இன்னும் பார்க்க வேண்டிய விஷயம் பல உண்டு' என்று தொடர்ந்தார் வித்யாசாகர். 'இந்த நட்புக் கண்ணோட்டம் நம்முடைய நாட்டில் சமுதாயப்

பார்வையாக மட்டுமல்லாமல் ஒரு ஆன்மிக உறவாகவும் பரிமளிக்கிறது. சுந்தரர் 'தம்பிரான் தோழர்' என்று சிவ பெருமானின் நண்பராகவே பார்க்கப் படுகிறார். அடேயப்பா எத்தனை உரிமை எடுத்துக் கொள்கிறார் மனுஷர்! திருமணம் முடிக்க, நெல்லைக் கொடுக்க, அதை சொந்த ஊரில் டெலிவரி செய்ய என்று எதற்கும் சிவபெருமான்தான் அவருக்கு உதவிக்கு வருவார். பார்வை போன நிலையில் 'மற்றைக் கண்தான் தாராதாயின் வாழ்ந்து போதீரே' என்று வசை பாடவும் செய்கிறார். அவருக்குத்தான் அந்த முக்கண்ணன் ஸ்பெஷலாக வெள்ளை யானையில் கைலாய யாத்திரை ஏற்பாடு செய்கிறார்'

அனைவரும் ரசித்துச் சிரித்தனர்.

ஒரு சமயம் சுந்தரமூர்த்தி நாயனார், தன் சிஷ்யர் குழாத்துடன் ஒரு சஞ்சாரமற்ற வனப் பகுதியில் பிரயாணம் செய்கிறார். அப்போது "சுந்தரம் எனை மறந்தனையோ" என்னும் அசரீரியின் குரல் கேட்கிறது. அது தன்னை ஆளும் சிவபிரான் குரல் என்று அவர் அறிகிறார். பக்கத்தில் இருப்பவர்களிடம் அங்கு சிவாலயம் எதாவது உண்டா என்று வினவுகிறார். பாழடைந்த கோவில் ஒன்று, முறையான வழிபாடில்லாமல் சிதிலமாகி இருப்பதை அறிகிறார். அங்கு அனைவரும் சென்று பார்க்கிறார்கள். பழைய கோவில். அங்கு பலநாள் அழுக்கும் தூசியும் படிந்த நிலையில் ஒரு சிவ லிங்கம். ஆனால் அது அவர் கண்களுக்கு எப்படித் தெரிந்தது தெரியுமா? பொன் போன்ற மேனியுடன், மன்னும் வைர மணியாக அந்த மழபாடி ஆண்டவன் மாணிக்கமாகத் தெரிந்தான், சுந்தரன் என்னும் அந்தத் தம்பிரான் தோழனுக்கு. மற்றவருக்கு அழுக்கு உருவம்; பக்தனுக்கு மட்டும் "பொன்னார் மேனியனே ...... மன்னே மாமணியே, மழபாடியுள் மாணிக்கமே" என்று வியக்கும் வண்ணம்

அழகுத் திருமேனி. எப்படி சாத்தியமாயிற்று? பார்க்கும் பார்வைதான் காரணம். மித்ரஸ்ய சக்க்ஷுஷின் பக்தி வெளிப்பாடு.

‘வைணவத்திலும் இதே போன்ற கருத்தினைப் பார்க்கலாம். முதிர்ந்த வயதில் ராமாநுஜர் அவர்களுக்கு பார்க்கும் பொருள் அனைவற்றிலும் நாராயணனே காட்சி அளிக்கிறான். அவர் வீதியில் செல்லும்போது குழந்தைகள் மணலைக் கொட்டி மலை போல உருவம் செய்து விளையாடுவதைப் பார்க்கிறார். அந்த மலை அவருடைய பரவசப் பார்வையில் திருவேங்கடமாகவே தோன்றுகிறது. அவர் உடனே தரையில் விழுந்து நமஸ்காரம் செய்து வழிபடுகிறார். அந்த அளவுக்கு அவர் எண்ணமும் பார்வையும் இறைவனிடம் லயித்து விட்டன.

அவருக்குத் திருப்பாவை ஜீயர் என்னும் பெயரும் உண்டு. அந்த அளவுக்கு அவர் திருப்பாவையை நேசித்தவர். அதனுடைய 18 வது பதிகமான “உந்து மதகளிற்று...” என்னும் பாடலை உருகிப் பாடியவாறே தன் ஆசானாகிய பெரிய நம்பியின் வீட்டுக்குச் சென்று, கதவைத் தட்டுகிறார். நம்பியின் பெண் அத்துழாய் என்னும் சிறுமி, கதவைத் திறக்கிறாள். அவளைக் கண்டவுடன் ராமாநுஜருக்கு ஆண்டாளே நேரில் வந்தது போன்ற உணர்வு. அப்படியே சாஷ்டாங்கமாக அச்சிறுமியின் காலில் விழுகிறார். இதுதான் பக்தியில் உறைந்து உருகிய நெஞ்சத்தின் பார்வை. வேதம் கண்ட நட்புப் பார்வையின் ஆன்மிக விரிவு.

இதெல்லாமாவது ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம். கம்பன் காட்டும் ஒரு காட்சிதான் “நட்புக் கண்ணோட்டத்தின்” எல்லை நிலம். பக்தி கலந்த நட்புக்கு மிகச் சிறந்த உதாரணம் குகன். அவன் எப்படி இருப்பான் என்று கம்பனின் வாக்கில் பார்ப்போமா.

*ஊற்றமே மிக ஊனொடு மீன் நுகர்*
*நாற்றம் மேய நகை இல் முகத்தினான்,*
*சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குவான்,*
*கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான்.*


அவன் முகத்தில் எப்போதும் மீன், மாமிச கந்தம் வீசுமாம்; சிரிப்பு என்றால் என்னவென்றே அறியாதவன்; எந்த விதச் சினமும் இல்லாத சமயத்திலும்கூட கடும் கோபம் கலந்த பார்வை; இது போதாதென்று எமனும் அஞ்சும் கொடும் குரலுடையோன். சரியான காட்டு ஆசாமின்னு வைத்துக் கொள்ளலாம்.

மறு பக்கம் ராமன். சத்வ குணமே வடிவானவன். தருமத்தின் பூரண உருவம். கவி வருணித்தாற்போல "பும்சாம் மோகனரூபாய" – ஆண்களே மயங்கும் கோமள ரூபம் படைத்தவன். தோள் கண்டார் தோளே கண்டார்—என்று அவனுடைய ஒவ்வொரு அங்கமும் கொள்ளை அழகு!!

இப்படி முற்றிலும் மாறுபட்ட இவ்விருவருக்கும் இடையேதான் எத்தகைய நட்பு. குகனோடு ஐவரானோம் என்றல்லவா ராமன் கட்டி அணைக்கிறான். இதுதான் உண்மையான நட்புக் கண்ணோட்டம். வேதம் கண்ட மித்ரஸ்ய சக்ஷு: என்னும் நிலைபாடு.'

சற்று நேரம் மௌனம் நிலவியது... இறுதியாக

'இனிமேல் ஆன்மிகத்திலும் சரி, லௌகீகத்திலும் சரி இந்த 'மித்ரஸ்ய சக்ஷு:' என்னும் உத்தியைக் கையாள வேண்டியதுதான்.' என்று உளமார அனைவரும் ஒப்புக் கொண்டனர்.



# பகவானின் அணுக்கத் தொண்டர் டி. ஆர். கனகம்மாளின் அருந்தவ வாழ்வு (5/6)

**தமிழில்: மா. முருகேசன்**

*மற்றுமொரு மொட்டைத் தலை*

*ஆஸ்ரமம் அருகில் வசித்து வந்த பக்தை ஒருவர் பகவானை ஒவ்வொரு நாளும் தரிசிக்க வந்து கொண்டிருந்தார்; குடும்பச் சூழல் காரணமாக அருகில் இருந்த வேறொரு ஊரில் சென்று வசிக்க வேண்டியதாயிற்று. திருவண்ணாமலையை விட்டு சென்றுவிட்டாலும் அப்பெண்மணி அடிக்கடி அவரால் முடிந்த பொழுதெல்லாம் பகவானை தரிசிக்க ஆஸ்ரமம் வந்துகொண்டிருந்தார். கனகம்மாள் விவரிக்கின்றார்.*

> ஒருமுறை, தரிசனத்திற்காக ஆஸ்ரமத்திற்கு வந்த பொழுது, நான்கு வயதுள்ள புத்திசாலியான குறும்புக்கார மகனையும் தன்னோடு அப்பெண்மணி அழைத்து வந்திருந்தார். அச்சிறுவன் ஒரு இடத்தில் உட்கார மறுத்துவிட்டு அங்கும் இங்கும் ஓடிக்கொண்டே இருந்தான். அவனுடைய ஒளி வீசும் கண்கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கி உட்கிரகித்துக் கொண்டன. பகவானின் சோஃபா அருகில் அவன் வந்து சில நிமிடங்கள் பகவானையே உற்று நோக்கிக் கொண்டு நின்றிருந்தான். அன்று பௌர்ணமி நாள். அன்று காலையில் தான் பகவானின் தலை மழிக்கப்பட்டிருந்தது. அச்சிறுவனுடைய தலையும் அதுசமயம் மழிக்கப் பட்டிருந்தது. மழிக்கப்பட்ட தன் தலை மீது தன் கையை தேய்த்துக் கொண்டே அக்குழந்தை தன் மழலையில் பகவானிடம் கூறியது, இது ஒரு மொட்டைத் தலை பிறகு பகவானை சுட்டிக்காண்பித்து, அது இன்னுமொரு

*மொட்டைத்தலை என்று கூறினான். இந்த கேளிக்கையில் பகவானும் சேர்ந்து கொண்டு அங்கிருந்த தலை மழிக்கப்பட்டவரைக் காண்பித்து அங்கே பார், அது இன்னுமொரு மொட்டைத் தலை என்றார். அந்த நேரம் மற்றுமொரு பக்தர் நுழைந்தார், அக்குழந்தை கூவியது, இன்னுமொரு மொட்டைத் தலை!*

*பௌர்ணமி நாளில் தலையை மழித்துக்கொள்வது சாதுக்களின் வழக்கமாகையால் அன்று ஆஸ்ரமத்தில் மொட்டைத் தலைகளுக்கு குறைவே இல்லை. பகவானும் அச்சிறுவனும் சந்தோஷமாக அங்கு மொட்டைத் தலைகளை காண்பித்து குறும்புத்தனமாக சிரித்துக் கொண்டிருக்கும் மகத்தான நேரத்தை பெற்றிருந்தனர். ஒவ்வொரு முறையும் சங்கடப்படாமல் அல்லது தன் உணர்வு இல்லாமல் ஒரு குழந்தையோடு சந்தோஷமாக விளையாட சிறந்த மகாத்மாவைத் தவிர வேறு யாரால் முடியும்? (மேலது, பக். 112113)*

## இரவில் நாகங்கள்

இரவில், மண்டபத்தில் பகவானோடு உதவியாளர்கள் தங்கினர். எவ்வித விலக்குமின்றி ஒவ்வொரு நாளும் நினைவு கூறத்தக்க சம்பவங்கள் நிகழும். அவர்களில் ஒருவர் வைகுண்டவாசன்; இப்பெயர் கடவுள் விஷ்ணுவின் பெயர்களில் ஒன்று. இச்சொல்லின் பொருள், வைகுந்தத்தில் வசிப்பவர் என்பதாகும். இது பற்றி கனகம்மாள் இவ்வாறு எழுதுகின்றார்.

*ஒரு நாள் இரவு, பகவானுக்கு அடுத்து வைகுண்டவாசன் படுத்துறங்கினார். திடீரென்று, தலையணைக்கு மிக அருகில் ஒரு பெரிய நாகப் பாம்பினைக் கண்டார். பயத்தில் பேச்சு எழாமல், பகவான் பக்கம் திரும்பி அவருக்கு நாகப் பாம்பினை சுட்டிக் காட்டினார். ஒரு சிறுவனைப் போல் பகவான் சந்தோஷத்தில் சப்தமிட்டு சொன்னார், வைகுண்டவாசன், அதைப் பார், எவ்வளவு அழகான உயிரினம். இது உன்னுடைய தலையணை தானே! அதனால் தான் உன்னைத் தேடி*

வந்துள்ளது! மனதில் பயமிருந்தாலும் வைகுண்டவாசன் வாய்விட்டு வெடிச்சிரிப்பு சிரித்தார். (மரபுப்படி, கடவுள் விஷ்ணு, ஆதிசேஷனை பாயாகக் கொண்டு பள்ளி கொண்டுள்ளார்.)

## பயிற்சியாளருக்கு ஒரு தாண்டவம்

நடைபயிற்சிக்கோ அல்லது சாப்பாட்டு கூடத்திற்கோ செல்லும்பொழுது ஒரு தடிக்குச்சியை தன்னோடே வைத்திருப்பார்; பயன்படுத்தினார். ஏனென்றால், அவரது முடக்கு வாதமும், தசைபிடிப்பும், ஊன்றுகோல் இல்லாமல் செல்வதை அவருக்குக் கடினமாக்கியது. மண்டபத்தில் நிகழ்ந்த ஒரு வேடிக்கையான நிகழ்வினை கனகம்மாள் இவ்வாறு எழுதுகின்றார்.

> அன்றாடம் வழக்கமாய் செய்யும் செயல்பாட்டினை பகவான் நேரம் தவறாமல் பின்பற்றியதால் அவரது உதவியாளர் அவர் மண்டபத்திலிருந்து எப்பொழுது புறப்படுவார் என்பதை துல்லியமாய் அறிந்து வைத்திருந்தார். எனவே, குறிப்பிட்ட நேரத்திற்கு மண்டபத்திலிருந்து புறப்படுவதற்குத் தோதாக ஊன்றுகோலை கொண்டுவந்துவிடுவார். ஒரு சமயம், உதவியாளர்களில் ஒருவர் கையில் ஊன்றுகோலோடு மண்டபத்தை நோக்கி வருவதை கண்டவுடன் கண்களை குறும்பாக சிமிட்டி பகவான் கூறினார், அங்கு பாருங்கள், என் ஊன்றுகோல் வருகின்றது. குரங்காட்டி கோலை வைத்துக்கொண்டு அவரது குரங்குகள் எப்படி ஆட வேண்டுமென சொல்லித்தருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். கோல் இங்கு வந்து விட்டபடியால் இந்த குரங்கு இப்பொழுது ஆடத் தொடங்க வேண்டும்! (மேலது, பக் 91 கோலுக்கு குரங்கு ஆடும் என்பது சொலவடை).

## முக்தி அருளல்

மற்றொரு நாள், பகவான் மலைமேல் ஏறி ஸ்கந்தாஸ்ரமம் செல்லும்பொழுது அவரது உதவியாளர் வெங்கட்ராமனும் சென்றார். அப்பொழுது வழக்கத்துக்கு மாறான சம்பவம் நிகழ்ந்தது.

*ஆஸ்ரமத்திலிருந்து ஸ்கந்தாஸ்ரமம் செல்லும் வழியில் படிகள் அமைந்த செங்குத்தான பகுதி ஒன்றுள்ளது. இந்த பகுதியில் செல்லும்பொழுது பகவான் ஒரு பெரிய பாறையை சார்ந்தும் ஊன்றுகோலை வலிமையாய் ஊன்றிக் கொண்டும் மெதுவாய் இறங்கிச் செல்வார். ஒரு நாள், சில பக்தர்கள் ஒரு இளைஞனை ஏற்பாடு செய்து அங்கு காத்திருக்கும்படியும், பகவான் அங்கு வரும்பொழுது அவரது பாதங்களைப் பற்றிக் கொள்ளுமாறு கூறியிருந்தனர். அந்த இளைஞனும் அவர்கள் கூறியவாறு பகவானின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு பகவானிடம் கூறினார், பகவான், எனக்கு முக்தி அருளுங்கள். இல்லையென்றால், மேற்கொண்டு நீங்கள் செல்ல உங்கள் கால்களை விட மாட்டேன் உண்மையில், அந்த பக்தர்கள் அருகிலிருந்த புதர்களில் மறைந்துகொண்டுதான் இருந்தனர். தன் ஊற்றுகோலை இறுகப் பற்றிக்கொண்டு, பகவான் கூறினார், அடேய், நீ தான் முக்தி அளிக்கும் நிலையில் இருக்கின்றாய்; என் பாதங்களை விடுவித்து போகவிடவில்லை என்றால் நான் விழப்போகின்றேன்; அது இந்த நொடியிலேயே எனக்கு முழு விடுதலை கொடுத்துவிடும் இந்த சொற்களைக் கேட்டு அவ்விளைஞன் அங்கிருந்து ஓடிவிட்டான். இவ்விநோத நிகழ்வினால் ஆச்சரியப்பட்ட வெங்கட்ராமன் அந்த இளைஞன் யார்? இந்நிகழ்வின் பொருள் யாதாய் இருக்குமென கேட்டார். பகவானின் ஆயத்தமான அதிரடியான பதில், ஓ, அதுவெல்லாம் அரங்கேற்றிய நாடகம். யாரேனும் பகவானிடமிருந்து எதையும் மறைக்க முடியுமா? ('Encounters with Bhagavan', Part II, The Mountain Path, July 2006, p. 33)*

### பகவானின் உடல்

*1940களின் பிற்பகுதியில் பகவான் உடலிலிருந்த முடக்குவாதமும் சதைப்பிடிப்பும் மோசமானது; நடப்பது அவருக்கு மிகக் கடினமானது. உடல் வலியையும் நடப்பதில் உள்ள இன்னல்களையும்*

பகவான் சாதாரணமாய் எடுத்துக்கொண்டு சொன்னார், உங்களுக்கெல்லாம் இரண்டு கால்கள், எனக்கு மூன்று கால்கள் உள்ளன.

1940களின் பிற்பகுதியில் ஆஸ்ரமம் வந்தடைந்த புதிய பக்தர்கள் பகவானின் தலையும் உடம்பும் நடுங்குவதைக் கண்டனர். அந்நடுக்கம் வயது முதிர்வினால் ஏற்படுகின்றது என எண்ணினர். அது அவ்வாறு இல்லை என்பதையும் பகவான் அருணாசல மலைமேல் இருந்த தொடக்க காலத்திலிருந்தே இந்த நடுக்கம் இருந்துள்ளது என்பதையும் கனகம்மாள் அறிந்துகொண்டார்.

> இளம் பருவத்திலிருந்தே பகவானின் கால்கள் திடமில்லாமல் நடுங்குறும் தன்மையுடையதாய் இருந்தன. அவருடைய தலையும் உடம்பும் நடுங்கியதால் பற்றுக்கோலாய் ஊன்றுகோல் ஒன்றை பயன்படுத்த வேண்டியதாயிற்று. ஒரு சமயம், தொடக்க காலத்தில் பகவானோடு தனியாக இருந்த குஞ்சுஸ்வாமி பகவானிடம் கேட்டார், பகவான், உங்கள் தலையையும் உடம்பையும் இந்த அளவு எது நடுங்கச் செய்கின்றது? பொதுவாக, இதுபோன்ற நடுக்கம் மிக வயதானவர்களிடம் மட்டுமே காணப்படும். இந்த இளம் வயதில் பகவானுக்கு இந்த நடுக்கம் ஏன் ஏற்படவேண்டும்? குறும்புத்தனமான புன்முறுவலோடு பகவான் இவ்வாறு பதிலுரைத்தார், ஒரு பெரிய யானையை ஒரு சிறு குடிலில் கட்டிப்போட்டால் என்னவாகும் என்று நினைக்கின்றீர்? யானையின் ஒவ்வொரு அசைவும் அச்சிறுகுடிலை குலுங்கி நடுக்கமுறச் செய்யாதா? அதுவே தான், இங்கு இதிலும் நிகழ்கின்றது. இந்த பதில் சாதாரணமாகவும் எளிமையானதாகவும் இருந்தாலும், கற்பனைக்கு எட்டாத அளவிலா ஆன்மிக ஆற்றலை கொண்டிருக்கும் இவ்வுடல் வலிமையற்றது அல்ல என்பதை தெளிவுப்படுத்துகின்றது. *(Cherished Memories, p.183)*

**பகவானுக்கு அறுவை சிகிச்சை**

பகவானின் உடம்புக்கு வயது ஆன போதிலும், சில பக்தர்கள் பகவானின் உடல் நலம் குன்றாது, உடல் அழிவற்றது என நினைத்து ஆச்சரியமடைந்தனர். பகவான் அழிவில்லாத நிரந்தரமானவர் என்று கூறலாம். ஆனால், அது உடல் அளவிலானது அல்ல.

1949 தொடக்கதில் இடது முழங்கைக்கு கீழ் ஒரு சிறு கட்டி தோன்றியது; ஆரம்பத்தில் அது மிகவும் சிக்கலானது என நினைக்கவில்லை. ஆனால் 1949 பிப்ரவரியில் ஆஸ்ரம மருந்தக மருத்துவமனையில் பகவானுக்கு அறுவை சிகிச்சை நடந்தது; மீண்டும் மீண்டும் அறுவை சிகிச்சை நடந்ததால் பகவானின் உடல் நலம் தொடர்ந்து குறைந்தது. 1949 திசம்பரில் நடந்த நான்காவது மற்றும் கடைசி அறுவை சிகிச்சைக்குப் பின் பகவான் புதிய மண்டபத்திற்கு எதிரில் ஜானகி மாதாஜியின் செலவில் கட்டப்பட்டிருந்த சிறிய அறையிலேயே (மகா நிர்வாண அறை) தங்கி இருந்தார்.

> பகவான் இல்லாத உலகை நினைக்கும்பொழுதே பக்தர்கள் மிக மனக்கிலேசமுற்றனர்; பிரார்த்தித்துக் கொண்டனர். புதிய மண்டபத்தின் வெளியே பகவானின் திருவுருவமேனி படிவம் கல்லில் சிலையாய் வடிக்கப்பட்டு வந்தபொழுது ஒரு பக்தை உளமாற பகவானிடம் விண்ணப்பித்தார், பகவான், இவ்வுடலை விட்டு விடக் கூடாது; எங்களுக்கு நீங்கள் தரிசனம் தந்துகொண்டே இருக்க வேண்டும். பகவான் புன்முறுவல் பூத்து சொன்னார், ஆம், ஆம், அங்கே பாருங்கள் அவர் பகவானின் திருவுருவ மேனி சிலையாய் வடிக்கப்பட்டு வருவதை சுட்டிக் காட்டி கூறினார், அவர்கள் பகவானை சிலையாய் வடித்து வருகின்றனர். இவர் எப்பொழுதும் உங்களுக்கு காட்சி தந்தருளுவார். புது மண்டபத்தில் இருந்த மற்ற பக்தர்களை நோக்கிக் கூறினார், இப்பொழுது மக்கள் எனக்கு குருவாய் மாறிவிட்டனர். தேகாத்ம புத்தியாகிய, நான் இந்த உடல் என்ற கருத்தை விட்டுவிட வேண்டுமென கூறி

*வருகின்றேன். ஆனால், நான் உடம்புடன் இருக்க வேண்டுமென விரும்புகின்றனர். எப்பொழுதும் தரிசனம் அளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக நான் உடலை விட்டு விடக் கூடாது; எப்பொழுதும் தரிசித்துக் கொண்டிருப்பதற்கு அவரும் எப்பொழுதும் மரணிக்கக் கூடாது; அவருடைய குழந்தைகளும்தான். அவர்கள் எப்பொழுதும் தரிசித்துக் கொண்டிருக்க வேண்டும். எனவே, நாம் எவரும் மரணிக்கக் கூடாது. (R. Narayana Iyer, The Mountain Path, April 1969, p.91)*

இந்த சமயத்தில் தான் பகவானின் தங்கையாகிய அலமேலு அம்மாளும் இதே போன்று பகவானிடம் விண்ணப்பித்துக் கொண்டார். இதை கனகம்மாள் இவ்வாறு விவரிக்கின்றார்.

*பகவான் மகா நிர்வாண அறையிலேயே இருந்தபொழுது இது நிகழ்ந்தது. பகவானின் தங்கை அலமேலு அம்மாள் மிகுந்த தயக்கத்துடன் அவர் அருகில் சென்று, கரைந்தோடும் கண்ணீருடன் அவரிடம் வேண்டி விண்ணப்பித்துக் கொண்டார், பகவான் நீங்கள் விருபாக்ஷ குகையில் இருந்தபொழுது ஒரு சமயம், ஒரு பாறையை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தியபொழுது அதன் கீழ் உங்களின் ஒரு கை அகப்பட்டுக் கொண்டது; கையை வெளியில் எடுத்து பார்த்தபொழுது விரல் ஒன்று அதனிடத்திலிருந்து பிசகி தனியாய் தொங்கிக் கொண்டிருந்தது. வாசுதேவ சாஸ்திரி அதை பார்த்தவுடன் மிக பதட்டம் அடைந்து வாய்விட்டு அழ ஆரம்பித்தார். நீங்கள் இவ்வாறு கூறி அவரை அமைதிபடுத்தினீர். ஏன் அழ வேண்டும்? எதுவும் நடந்துவிடவில்லை! பிறகு, நீங்கள் மற்றொரு கையால் தொங்கும்விரலை அதற்குரிய இடத்தில் வைத்தீர்; உடனே அவ்விரல் அதனிடத்தில் சாலப் பொருத்தமாய் அமைந்தது; விரல் பிசகியதற்கான எவ்வித அறிகுறியும் அங்கில்லை. அதேபோன்று, உங்கள் இடது கையில் சர்கோமா உள்ள இடத்தை ஏன் உங்களுடைய பொன்னான வலது கையால் தொடக்கூடாது, பகவான்?*

அதை நீங்கள் செய்தால் தானாகவே அது குணமாகிவிடும். நமது பதற்றமெல்லாம் முடிவுக்கு வந்துவிடும். வாசுதேவ சாஸ்திரியின் பதற்றத்தை அன்று போக்கியதுபோல் இன்றும் உங்கள் மனதை சர்கோமா உள்ள கையின்மேல் வைத்து குணமடையச் செய்து எங்களை ஆசீர்வதித்தருள வேண்டும் அன்போடும் கருணையோடும் அவருடைய தங்கையை கண்ணுற்று நோக்கினார். சிறிது நேரம் கழித்து, பகவான் பதிலுரைத்தார், ஆம், ஆம், எனக்கு ஒரு தேகம் உள்ளது; அதில் கையும் உள்ளது; அதில் நோய் உள்ளது; அந்நோய் சிகிச்சைக்கு குணமாக மறுக்கின்றது; என்னுடைய மனதை அதன்மேல் செலுத்தி அந்நோயை போக்க வேண்டும். ஆனால், இதையெல்லாம் செய்வதற்கு, மனம் எங்கே இருக்கின்றது *(Resplendent Ramana, 'The Mountain Path, October 1986, p.256)*

*(நன்றி சரணாகதி)*

(தொடரும்)

# இனிவரும் திருநாட்கள் 2026

| பூஜை/ விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| பகவான் அருணையடைந்த தினம் | 01/09/2026 | செவ்வாய் |
| நவராத்திரி விழா துவக்கம் | 11/10/2026 | ஞாயிறு |
| சரஸ்வதி பூஜை | 20/10/2026 | செவ்வாய் |
| விஜயதசமி | 21/10/2026 | புதன் |
| தீபாவளி | 08/11/2026 | ஞாயிறு |

# இரைச்சலுக்கு நடுவே ஓர் அமைதி

## ரமணரின் வழியில் ஒரு மாலை நேர உரையாடல்

**ரூபவதி**

*சென்னையின் வழக்கமான மாலை நேரப் பரபரப்பு அந்தத் தெருவில் ஒலித்துக் கொண்டிருந்தாலும், அந்த வீட்டின் வரவேற்பறையில் மட்டும் திருவண்ணா மலையின் ரமணாஸ்ரமத்தில் இருப்பது போன்ற ஒரு ஆழமான அமைதி குடிகொண்டிருந்தது. காற்றில் லேசாகக் கலந்திருந்த சந்தனப் புகையின் வாசம் மனதை லேசாக்கியது.*

*சுவரில் கருணை ததும்பும் கண்களுடன் அருள்பாலிக்கும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் திருவுருவப் படம். அதன் கீழே உள்ள தனது சாய்வு நாற்காலியில், கண்களை மூடி தியான நிலையில் அமர்ந்திருந்தார் தாத்தா. முப்பதாண்டுகளுக்கும் மேலாக அரசுப் பணியில் நேர்மையோடும், எவ்விதச் சலனமுமின்றியும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவருக்கு அந்த மனப்பக்குவத்தைத் தந்தது ரமணரின் 'நான் யார்?' என்ற தத்துவமே.*

*அவரைச் சுற்றி நாற்காலிகளிலும், தரையிலுமாக நான்கு பேர் அமர்ந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையைச் சேர்ந்தவர்கள்:*

- *அகல்யா: ஒரு முன்னணி ஐடி நிறுவனத்தில் ப்ராஜெக்ட் மேனேஜர். நாள் முழுவதும் மீட்டிங்குகள், டெட்லைன்கள் என ஓடிக்கொண்டிருக்கும் அவளது மூளை, தாத்தாவின் அருகில் அமரும்போது மட்டுமே "ஸ்லீப் மோடுக்கு" (Sleep Mode) செல்லும்.*

- *விமலன்:* கடந்த வாரம்தான் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வை எழுதி முடித்திருந்தான். தேர்வுக்குப் பிந்தைய அதீத உற்சாகமும், அடுத்து என்ன க்ரூப் எடுப்பது என்ற லேசான குழப்பமும், கைகளில் சதா சர்வகாலமும் தவழும் மொபைல் போனுமாக இருக்கும் ஒரு துறுதுறு சிறுவன்.
- *தேஜா & சுஷ்மிதா:* கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவியர். ஃபேஷன், சோஷியல் மீடியா, எதிர்காலக் கனவுகள், நட்பு வட்டாரப் பிரச்சனைகள் என அன்றாடக் கல்லூரி வாழ்க்கையின் சுழலில் சிக்கியிருப்பவர்கள்.

அன்று விமலன் தன் மொபைலில் தொடர்ந்து கேம் விளையாடி சலித்துப்போய், பெருமூச்சு விட்டபடி நிமிர்ந்தான்.

“எக்ஸாம் முடிஞ்சா ஜாலியா இருக்கலாம்னு நினைச்சேன். ஆனா, இப்ப ரொம்ப போர் அடிக்குது. மனசு ஏதோ ஒரு மாதிரி இருக்கு...” என்று விமலன் சலித்துக் கொண்டான்.

அப்போது குறுக்கிட்ட தேஜா, “அதேதான் விமல்! எனக்கும் சுஷ்மிதாவுக்கும் நாளைக்குக் காலேஜ்ல ஒரு முக்கியமான பிரசன்டேஷன் இருக்கு. ஆனா, மனச ஒருநிலைப்படுத்தவே முடியல. ஏகப்பட்ட சிந்தனைகள்...” என்றாள்.

இதுவரை கண்களை மூடியிருந்த தாத்தா, மெல்லக் கண்களைத் திறந்தார். அவரது முகத்தில் அத்தனை சாந்தம். மெல்லிய புன்னகையுடன் அவர்களைப் பார்த்தார்.

“மனசுங்கிறது ஒரு குரங்கு மாதிரி விமல். அதுக்கு எப்பவுமே ஏதாவது ஒரு வேலை கொடுத்துக்கிட்டே இருக்கணும்னு நினைக்கும். வேலை இல்லைன்னா, இப்படித்தான் போர் அடிக்குதுன்னு குதிக்கும்.”

"இதுக்கு என்னதான் தாத்தா தீர்வு? ஐடி வேலையிலயும் இதே பிரஷர் தான். ஒரு நிமிஷம் கூட என்னால அமைதியா உட்கார முடியல," என அகல்யா தன் பங்குக்குக் கேட்டாள்.

தாத்தா சுவரிலிருந்த ரமணரின் படத்தைப் பார்த்துக் கைகூப்பினார். "ரமணாஸ்ரமத்துல ஒருமுறை இதேமாதிரி ஒரு சம்பவம் நடந்துச்சு... வெளிநாட்டுல இருந்து ஒரு பெரிய தொழிலதிபர் பகவானைப் பார்க்க வந்திருந்தார். அவருக்குப் பணம், புகழ்னு எல்லாம் இருந்தது. ஆனா தூக்கம் இல்லை, நிம்மதி இல்லை. தன் மனசை எப்படி அடக்குறதுனு சொல்லி அழுதார்."

தாத்தா சற்று நிறுத்தி, நால்வரையும் பார்த்தார். "பகவான் அவர் முகத்தைப் பார்த்து ரொம்ப இயல்பாகக் கேட்டார்... 'சரி, மனசு அலைபாயுதுன்னு சொல்றியே, அந்த மனசு உனக்குள்ள எங்க இருக்குனு கொஞ்சம் தேடிப் பார்த்து சொல்லு' என்றார். அந்த வெளிநாட்டவர் குழம்பிப் போய், கண்ணை மூடித் தேடினார். தேடத் தேட.... மனசுனு ஒன்னு தனியா இல்லவே இல்லை, அது வெறும் எண்ணங்களின் குவியல்தான் அப்படிங்கிற உண்மை அவருக்குப் புரிஞ்சது. எண்ணங்களை நிறுத்தினா, மனசும் இல்லை, சஞ்சலமும் இல்லை..."

"கேள்வி கேட்கிறது மட்டுமில்ல விமல், அந்தப் பதிலை நோக்கி உள்ளுக்குள்ள பயணிக்கணும்," என விளக்கினார் தாத்தா. "பகவான் எந்தப் பெரிய தத்துவத்தையும் உபதேசிக்கல. 'உன்னை நீயே அறிந்துகொள்'னு ரொம்ப எளிமையா சொன்னார். அமைதி வெளியில இல்லை, உங்க ஒவ்வொருத்தருக்குள்ளும்தான் இருக்கு."

அறையில் ஓர் ஆழமான அமைதி நிலவியது. "தாத்தா, ரமண மகரிஷியைப் பற்றி நினைக்கும் போது, அவர் ஒரு பெரிய ஞானி, அவரை நெருங்குவதே கடினம்

என்று ஒரு பிம்பம் வருகிறது. அவர் நிஜமாகவே எப்படி இருப்பார்?" என்று கேட்டாள் அகல்யா.

"அவர் அப்படிப்பட்டவர் இல்லை அகல்யா," என்று கனிவுடன் பதிலளித்தார் தாத்தா. "அவர் மிக மிக எளிமையானவர். நம் குடும்பத்தில் உள்ள ஒரு மூத்த உறுப்பினரைப் போலத்தான் தன் தினசரி காரியங்களை அவரே செய்து வந்தார். அவர் சமையற்கூடத்தில் அனைவருக்கும் முன் உதாரணமாக வாழ்ந்து காட்டினார். அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து காய்கறிகள் நறுக்க உட்கார்ந்து விடுவார். எல்லோரும் சமம் என்பதால் எந்தப் பொருளையும் வீணாக்கக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார்."

"தாத்தா, அவருக்கு விலங்குகள் மேல் ரொம்ப அன்பு என்று சொல்வார்களே?" என்று குறுக்கிட்டாள் தேஜா.

"அது நூற்றுக்கு நூறு உண்மை தேஜா. மனிதர்களை எப்படி நேசித்தாரோ, அதேபோல பசு, மயில், மான், குரங்கு, நாய், அணில் என அனைத்து ஜீவன்களிடமும் அவர் எல்லையற்ற அன்பைக் காட்டினார். 'லக்ஷ்மி வந்து விட்டாள். அவளுக்கு உடனே சாதம் கொடுங்கள்' என்று பசுவைக் கனிவாக அழைப்பார்."

"தாத்தா, எனக்கு ஆன்மிகம், வேதாந்தம் எல்லாம் ரொம்பப் பெரிதாகத் தெரிகிறது. 'நான் இந்த உடம்பு அல்ல' என்று அவர் சொல்வதன் அர்த்தம் என்ன?" என்று தயக்கத்துடன் கேட்டான் விமலன்.

"'நான் செத்து விடப்போகிறேன்' என்ற எண்ணம் அவருக்கு முதலில் வந்தபோது, உடலை அப்படியே விறைப்பாகக் கிடத்தி, சாவுக் காட்சியை ஒரு நாடகம் போலவே செய்து பார்த்துக்கொண்டார். அப்போது உடல் மௌனமாகச் செயலற்ற ஜடமாக இருந்தாலும், 'நான் இச்சடவுடலுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி' என்று

அனுபவபூர்வமாக உணர்ந்தார். இந்த 'நான்' என்னும் சக்திக்கு மரணம் இல்லை என்பதை அவர் அறிந்தார்."

"அப்படியானால் 'அகங்காரம்' என்றால் என்ன தாத்தா?" என்று கேட்டாள் அகல்யா.

தாத்தா புன்னகைத்தார். "ரமணர் மதுரையில் இருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்வார். ஒரு அண்டை வீட்டுக்காரர் திருடனைப் பிடிக்க நினைத்தபோது, அந்தத் திருடன் புத்திசாலித்தனமாக 'அதோ அங்கே ஓடுகிறான் பார்! இங்கே, இங்கே பிடியுங்கள்!' என்று உரக்கக் கத்தி மற்றவர்களை ஏமாற்றிவிட்டுத் தப்பித்துவிட்டான். அதுபோலத்தான், நாம் அழிக்க நினைக்கும் அகங்காரம் என்ற திருடன், நம்முடனேயே ஒத்துழைப்பது போல் அடங்கி, நம்மை நைசாக ஏமாற்றி விடுகிறான்."

ஆத்ம விசாரம் என்றால் என்ன? "ஆத்ம விசாரம் என்பது 'நான் யார்?' என்று உன்னையே நீ கேட்டுக்கொள்வதுதான். உன் மூச்சை அடக்கிக்கொண்டு உன்னுள் ஆழ்ந்து, உனது தன்மை என்ன என்பதை நீயே விசாரம் செய். அப்படித் தேடினால் எண்ணங்கள் அற்ற தருணத்திலும் 'நான் நான்' என்ற ஒன்று தானாக ஜொலிப்பதை அறியலாம். இதுவே ஆத்மா."

"தாத்தா, ஐடி துறையில் எப்பொழுதும் வேலைப்பளு அதிகமாகவே இருக்கிறது. பல நேரங்களில் எதிர்காலத்தைப் பற்றிய பயமும், மன அழுத்தமும் ஏற்படுகிறது. இதை எப்படி எதிர்கொள்வது?" என்றாள் அகல்யா.

"ரயிலில் பயணம் செய்யும் ஒருவர், தன் தலையில் உள்ள மூட்டையை வண்டியில் கீழே வைக்காமல், தானே சுமந்து கொண்டே செல்வதை நினைத்துப் பார். நாமும் நம் கவலைகளைச் சுமப்பது அதே அளவு முட்டாள்தனமானதுதான். உன்னை இயக்கும்

*ஒரு பெரிய சக்தி இருக்கிறது என்று நம்பி, பாரத்தை அந்த இறைவனிடம் ஒப்படைத்துவிடு. இதுதான் 'சரணாகதி'."*

*மௌனமே சிறந்த உபதேசம்: பகவானின் மௌனம் என்பது வெறும் வாயை மூடிக்கொண்டிருப்பதல்ல; அது மனதின் முழுமையான அமைதி. வானொலியில் பல இரைச்சல்கள் வரும்போது, சரியான அலைவரிசையை வைத்தால் தெளிவான இசை கேட்பது போல, மனம் அமைதியாக இருக்கும் போதுதான் உண்மையான தெளிவு பிறக்கும்.*

*கர்மாவும் முயற்சியும்: "எது நடக்க வேண்டுமோ அது நடக்கும், எது நடக்கக் கூடாதோ அது எவ்வளவு முயன்றாலும் நடக்காது. ஆனால், அதற்காக நாம் எந்த முயற்சியும் செய்யாமல் சும்மா இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. நடக்கும் நிகழ்வுகளுக்கு வெறும் சாட்சியாக மனம் பாதிக்கப்படாமல் இருப்பதே நாம் செய்யும் மிகச் சிறந்த முயற்சி."*

*"தாத்தா, நான் அடுத்து மேல்நிலை வகுப்பு (11th) செல்லப் போகிறேன். படிக்கும்போது மனம் அலைபாய்கிறதே, இதை எப்படிக் கட்டுப்படுத்துவது?" என்று கேட்டான் விமலன்.*

*"ஒரு யானை வீதியில் நடந்து செல்லும்போது, தன் தும்பிக்கையால் எல்லாவற்றையும் பிடித்து இழுக்கும், அங்கும் இங்கும் அலைபாயும். ஆனால் பாகன் அந்த யானையின் தும்பிக்கையில் ஒரு சிறிய இரும்புச் சங்கிலியைக் கொடுத்துவிட்டால், அது அந்தச் சங்கிலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு வேறு எதையும் தொடாமல் நேராக நடக்கும். அதுபோலத்தான் நம் மனமும். மனம் வேறு சிந்தனைகளை நோக்கி ஓடும் போது, மீண்டும் மீண்டும் அதை இழுத்து வந்து நீ படிக்கும் பாடத்தில் நிலைநிறுத்த வேண்டும். தொடர்ச்சியான பயிற்சியால் மனம் ஒருமுகப்படும்."*

"எவ்வளவு பெரிய தத்துவங்களை எல்லாம் அன்றாட வாழ்க்கையின் உதாரணங்கள் மூலம் மிக எளிமையாக பகவான் விளக்கியுள்ளார்!" என்று பெருமூச்சு விட்ட அகல்யாவின் முகத்தில் இருந்த இறுக்கம் விலகி உண்மையான புன்னகை மலர்ந்தது.

"ஆமாம் குழந்தைகளா," என்று முடித்தார் தாத்தா. "ரமணர் ஆசிரமத்தில் எந்த ஒரு வேலையையும் தியானம் போலத்தான் செய்வார். நாமும் நம் செயல்களை முழு கவனத்துடனும், 'நான் செய்கிறேன்' என்ற அகங்காரமின்றியும் செய்தால் அதுவே மிகச் சிறந்த ஆன்மிகம்."

சென்னை மாநகரத்தின் போக்குவரத்துச் சத்தம் ஜன்னல் வழியே லேசாகக் கேட்டாலும், அந்த ஹாலில் இருந்த நால்வரின் மனதிலும் இப்போது சலனங்கள் ஓய்ந்து, ரமணரின் அமைதி மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது. அன்றைய மாலை நேர உரையாடல், அவர்களின் வாழ்வை வேறொரு கோணத்தில் பார்க்க ஒரு அழகான தொடக்கமாக அமைந்தது.

**ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை**

**தகவல் மற்றும் தொடர்புக்கு**

For Website: https://www.gururamana.org

For Accommodation: https://stay.gururamana.org

For Parayana: https://parayana.gururamana.org

For Search: https://search.gururamana.org

# யாவும் ரமணன்

**வித்யாசங்கர்**

*முதலும் முடிவும் முழுதும் ரமணன்*
*முதலும் முடிவும் இல்லா ரமணன்*
*முருவலில் உள்க ஈர்க்கும் ரமணன்*
*முக்தியே நீயென்று சொல்லும் ரமணன் (1)*

*விதையாம் பக்தி அருளும் ரமணன்*
*சிரத்தை நீராம் தெளிக்கும் ரமணன்*
*கதையும் சத்சங்கம் வார்க்கும் ரமணன்*
*அதுவாய் உள் நின்று காக்கும் ரமணன் (2)*

*பதத்தை நினைத்திட அருளும் ரமணன்*
*பதத்தில் உருகிட உருக்கும் ரமணன்*
*பதத்தில் ஒடுங்கிட அணைக்கும் ரமணன்*
*பதமே நீயென்று சொல்லும் ரமணன் (3)*

*அருட்கடல் மலையே கங்கை ரமணன்*
*அருகினில் அமர்த்திடும் அன்னை ரமணன்*
*அருவிபோல் சோவென்று நனைக்கும் ரமணன்*
*இருதயம் பொங்கவே அமர்ந்திடும் ரமணன்*
*இருப்பே நீயென்று அமர்த்திடும் ரமணன் (4)*

# ரமண தரிசனம்: கண்டேன் அவர் திருப்பாதம்

**D. தியாகராஜன்**

“விருப்புண்டு விரும்பி மெய்ம்மையே யுள்ளிக் கால்கொடுத் திருக்கையிலிருந்து... கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்!” என்று அப்பர் பெருமான் சிவதரிசனம் கண்ட மாத்திரத்தில் பாடினார்.

திருவாதவூரரான மாணிக்கவாசகர், திருப்பெருந் துறையில் குருந்த மரத்தடியில் தன் குருநாதனைக் கண்டபோது, “சிந்தனையை வந்துருக்கிச் சிவமாக்கிய என்தேவன்... கழுக்குன்றில் கண்டேனே!” (கண்டபத்து) என்று தன் அகம் உருகிப் பேரானந்தம் அடைந்தார்.

திருஞானசம்பந்தர், சிவ பார்வதியின் கருணை ததும்பும் காட்சியைக் கண்டவுடனே “தோடுடைய செவியன்...” என்று கைசுட்டி, அந்தப் பேரன்பில் தன்னை முழுமையாக இழந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார், இறைவன் தன்னை வலிய வந்து ஆட்கொண்டபோது அகம் குளிர்ந்து, “மற்றப்பற்று எனக்கின்றி நின்றிருப்பாதமே சிந்திப்பேன்...” என்று முழுமையாகச் சரணடைந்தார்.

சைவ சமயக் குரவர்களான இந்த நால்வரும் சிவபெருமானை நேரில் தரிசித்தபோது அடைந்த அதே மெய்சிலிர்க்கும் அனுபவத்தையும், ஆன்ம விடுதலையையும், சரணாகதியையும் அருணாசலத்தின் அடிவாரத்தில் மௌனமே வடிவாக நின்ற ரமண மகரிஷிகளை முதன்முதலில் கண்ட பக்தர்கள் பெற்றனர்.

“நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?” என்று தர்க்கம் பேசிய விவேகானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின்

ஒரு சிறு ஸ்பரிசத்தால் தன் அகந்தை அழிந்து பிரபஞ்ச தரிசனம் கண்ட அதே ஆன்மிகத் திறப்பினையும் (Mystical Experience) இங்கு ஒப்பு நோக்கலாம்.

ஒரு மனிதரைச் சந்திக்க வந்தவர்கள், பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கத் துணைநிற்கும் ஒரு கலங்கரை விளக்கத்தைக் கண்டனர். ரமண பகவானின் அருட்பார்வையிலும், சொல்லற்ற மௌனத்திலும் தங்களை இழந்த எண்ணற்ற அன்பர்களில் சிலரின் முதல் தரிசன அனுபவங்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

*1. ஆரம்பகால அன்பர்களின் தரிசன அனுபவங்கள்*

பகவான் ரமணர் திருவண்ணாமலைக்கு வந்து மௌனத் தவம் இயற்றிய ஆரம்ப காலங்களில், அவரது தெய்வீக ஈர்ப்பால் பல தூய ஆத்மாக்கள் அவரை நாடி வந்தன.

- இராமநாத பிரம்மச்சாரி: ரமண பக்தர்களில் மிக முக்கியமான ஆரம்பகால அன்பர் இவர். மிகவும் இளவயதிலேயே பகவானைத் தரிசிக்க வந்தவர், அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே தன் உலகப் பற்றுகள் அனைத்தையும் துறந்தார். உடல் மெலிந்து காணப்பட்டாலும், பகவான் மீதான பக்தியில் அவர் ஒரு மாவீரனாகத் திகழ்ந்தார். “ரமணனைத் தவிர எனக்கு வேறொரு உலகம் இல்லை” என்ற தீர்க்கமான முடிவை அவரது முதல் தரிசனமே அவருக்குள் ஏற்படுத்தியது.
- பழனி சுவாமி: பகவான் பாதாள லிங்கத்திலும், பின்னர் குருமூர்த்தத்திலும் மௌனத் தவம் இருந்தபோது, அவரது விராட் ரூபத்தை அருகிலிருந்து தரிசித்தவர். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே அறியாமல் அகமுகமாக இருந்த இளைய ரமணருக்கு, ஒரு தாயைப் போலவும், முதல் அணுக்கத் தொண்டராகவும் இருந்து சேவை செய்த பெருமை இவரையே சாரும்.
- சிவப்பிரகாசம் பிள்ளை (1902): தத்துவப் பேராசிரியரான இவர், “நான் யார்?” என்ற வினாவை மணலில் எழுதிக் கேட்டபோது, பகவான் மௌனத்தையே விடையாகத் தந்து, பின் அதனை எழுத்துப்பூர்வமாக அருளினார்.

*அந்த முதல் சந்திப்பே உலகிற்கு 'ரமண தத்துவம்' எனும் மகத்தான பொக்கிஷத்தைக் கொடுத்தது.*

- *மஸ்தான் சுவாமி: நெசவுத் தொழிலைச் சேர்ந்த ஒரு இஸ்லாமிய அன்பரான இவர், பகவானை முதன்முதலில் விரூபாக்ஷ குகையில் தரிசிக்கச் சென்றார். குகையின் வெளியே நின்றிருந்த இவரை பகவான் நேருக்கு நேர் பார்த்தார். அந்தத் தீட்சண்யமான அருட்பார்வை பட்ட மறுகணமே, அவர் தன்னிலை மறந்து பல மணிநேரம் ஆழ்ந்த சமாதி நிலைக்குச் சென்றார். முதல் பார்வையிலேயே ஒருவரை ஆத்ம நிஷ்டையில் ஆழ்த்திய ரமணப் பிரவாகத்திற்கு இவரே சிறந்த சாட்சி.*

## 2. அறிவுலகின் சரணாகதி: அகந்தை அழியும் தருணம்

*அறிவுத்திறத்தால் உலகை அளக்க முனைந்த மேதைகள், தர்க்கம் செறிந்த மனங்கள் பகவானின் சந்நிதியில் தங்களை இழந்தனர்.*

- *காவ்யகண்ட கணபதி முனி (1907): பல சாத்திரங்களைக் கற்றறிந்தும் அமைதி கிட்டாத ஏக்கத்தோடு பிரம்மண சுவாமிகளை (ரமணரை) நாடினார். "தவத்தின் இலக்கணம் என்ன?" என்று கேட்டபோது, "நான் என்ற உணர்வு எழுகின்ற இடத்தைக் கவனி. அதுவே தவம்..." என பகவான் மௌனம் கலைத்து அருளினார். அந்த உபதேசமே முனியின் வாழ்வை மாற்றியது. இவரே "பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி" என்று உலகிற்கு நாமகரணம் சூட்டியவர்.*
- *தேவராஜ முதலியார்: மிகச் சிறந்த வழக்கறிஞரான இவர், தர்க்க ரீதியான பல கேள்விகளோடு பகவானை அணுகியவர். ஆனால் பகவானின் ஒளிரும் கண்களும், வாதங்களை வெல்லும் ஒரு புன்னகையும் அவரது அகந்தையை வீழ்த்தின. முதல் தரிசனத்திற்குப் பின் தன் வாதங்களை எல்லாம் கைவிட்டு ரமணரிடம் சரணடைந்த முதலியார், ஆசிரமத்தின் முக்கியப் பதிவாளராக மாறி 'அனுதினமும் ஸ்ரீ பகவானுடன்' (Day by Day with Bhagavan) என்ற நூலை உலகிற்கு அளித்தார்.*

- *பேராசிரியர் ஜி.வி. சுப்பராமய்யா: ஆங்கிலப் பேராசிரியரான இவர், 1933ல் தன் அருமைப் பெண் குழந்தையை இழந்த மாபெரும் துயரத்தோடு பகவானைக் காண வந்தார். பகவானின் சந்நிதியில் நுழைந்தவுடன், பகவானின் கருணை ததும்பும் பார்வை இவர் மீது விழுந்தது. அந்த முதல் பார்வையிலேயே அவரது துயரங்கள் அனைத்தும் பனிப்போல் விலகி, ஒரு தாயின் மடியில் இருப்பதைப் போன்ற எல்லையற்ற ஆறுதலை அடைந்தார்.*
- *லட்சுமண சர்மா (‘Who?’): தர்க்க ரீதியாகத் தேடிக் களைத்த இவருக்கு, பகவானின் மௌன தரிசனம் ஆன்மாவின் ஆழத்தை உணர்த்தியது. இவர் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மகானுடன் நெருங்கிப் பழகி, அவரது உன்னத தத்துவத்தை நுணுக்கமாகக் கற்றறிந்தார். ரமணரின் ஆழமான தமிழ்ப் பாக்களை அழகிய சமஸ்கிருதத்தில் கவனமாக மொழிபெயர்த்ததன் மூலம், இந்த காலத்தால் அழியாத ஞானம், இறுதி ஆன்மிக விடுதலையையும் சத்தியத்தையும் தேடும் எண்ணற்ற உண்மையான சாதகர்களைச் சென்றடைவதையும் அவர்களுக்கு உத்வேகம் அளிப்பதையும் உறுதி செய்தார்.*

### *3. அன்னையரின் அன்பமுது: பெண் பக்தர்களின் அளப்பரிய பக்தி*

பகவான் அனைவரையும் சமமாகவே கண்டார்; பெண் பக்தர்கள் அவரிடம் ஒரு தாய்மையையும், இறைவனையும் ஒருங்கே கண்டனர்.

- *தேசூர் அகிலாண்டம்மா: 1903ஆம் ஆண்டு வாக்கில் விருபாக்ஷ குகையில் அகிலாண்டம்மா முதல்முறையாக பகவானைத் தரிசித்தார். அந்த இளம் சந்நியாசியின் அமைதியான முகமும், கருணை ததும்பும் கண்களும் அவரது நெஞ்சை உருக்கின. முதல் தரிசனத்திலேயே பகவானைத் தன் குழந்தையாகவும், தெய்வமாகவும் ஏற்றுக்கொண்டு, தன் வாழ்நாள்*

*முழுவதும் பகவானுக்குப் பசியாற்றும் சேவையை மேற்கொண்டார்.*

- *எச்சம்மாள் மற்றும் முதலியார் பாட்டி: தங்கள் வாழ்வில் பல துயரங்களைச் சந்தித்த இவர்கள், பகவானின் முதல் தரிசனத்திலேயே அமைதி பெற்றனர். பகவானுக்கு உணவளிக்காமல் தாங்கள் உண்பதில்லை என்ற வைராக்கியத்தோடு வாழ்ந்த புண்ணிய ஆத்மாக்கள்.*
- *சூரி நாகம்மா: இளம் வயதிலேயே கணவனையும், சுற்றத்தையும் இழந்து பெரும் சோகத்தோடு அமைதியைத் தேடி 1941ல் ஆசிரமம் வந்தடைந்தார். பழைய ஹாலில் சோபாவில் அமர்ந்திருந்த பகவானைக் கண்ட மாத்திரத்தில், அவரிடமிருந்து வெளிப்பட்ட பிரம்மாண்டமான அமைதி அலைகள் நாகம்மாவின் இருதய காயங்களை முற்றிலுமாக ஆற்றின. தன்னுயிருக்கு உயிரான குருவாக ரமணரை ஏற்று, அவர் 'ஸ்ரீ ரமணாச்ரமக் கடிதங்கள்' எனப் படைத்த நூல்கள் இன்று ரமண பக்தர்களின் வேதமாகத் திகழ்கின்றன.*
- *கனகம்மாள்: 1946ஆம் ஆண்டு பகவானைத் தரிசிக்க வந்தவர், முதல் சந்திப்பிலேயே பகவானின் ஒளிரும் கண்களால் காந்தம் போல ஈர்க்கப்பட்டார். உலகியல் வாழ்வைத் துறந்து நிரந்தரமாக ஆசிரமவாசியான இவர், பின்னாளில் முருகனாரின் நூல்களுக்கு உரை எழுதி ரமணத் தொண்டில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார்.*

## *4. ஆசிரமத்தின் தூண்கள்: நிழலாய் நின்ற நித்ய பக்தர்கள்*

- *சுந்தரேச ஐயர்: தனது 12வது வயதிலேயே பகவானை முதன்முதலில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர். அந்தச் சிறு வயதில் பகவானின் திருமுகத்தைக் கண்டதும் ஏற்பட்ட ஈர்ப்பு, அவர் வாழ்நாள் முழுதும் தொடர்ந்தது. ஆசிரம அஞ்சலகப் பொறுப்பை கவனித்து வந்த இவர், பகவானின் அணுக்கத் தொண்டராகத் திகழ்ந்தார்.*
- *பலராம ரெட்டி: அரவிந்த ஆசிரமத்தில் பல ஆண்டுகள் தியானப் பயிற்சியில் இருந்தவர். 1937ல் பகவானைக்*

காண ஆசிரமம் வந்தார். பழைய ஹாலில் நுழைந்து அமர்ந்தவுடன், பகவானின் தீட்சண்யமான பார்வை இவர் மீது நிலைத்தது. ஓடிக்கொண்டிருந்த மன ஓட்டங்கள் அனைத்தும் அந்த ஒரு பார்வையில் ஸ்தம்பிக்க, தன்னுள் ஆழமான மௌனம் இறங்குவதை அவர் உணர்ந்தார். ரமணரே தனது இறுதி குரு என உணர்ந்து நிரந்தரமாக திருவண்ணாமலையிலேயே தங்கிவிட்டார்.

- விஸ்வநாத சுவாமி & அண்ணாமலை சுவாமி: பகவானின் உறவினராக இருந்தாலும் முதல் தரிசனத்திலேயே பகவானின் அண்டவெளித் தனிமையைக் கண்டு துறவியானவர் விஸ்வநாத சுவாமி. இவர் பகவானின் மௌனத்தின் ஆழத்தை உணர்ந்து, தனது வாழ்நாளை ரமணருக்கு அர்ப்பணித்த சிறந்த சாதகர். அண்ணாமலை சுவாமி, தியானம் என்றால் என்னவென்றே தெரியாமல் வந்து, ஆசிரமக் கட்டுமானப் பணிகளைச் செய்து பகவானால் ஞானியாக மாற்றப்பட்டவர்.

5. கவிஞர்களின் காதலும் கானமும்

- முருகனார்: ரமண சந்நிதியை அடைந்த பக்தர்களில் மாணிக்கவாசகராகத் திகழ்ந்தவர். 1923இல் பகவானைக் காண முதல்முறையாக வந்தபோது, அவர் தான் இயற்றிய "பார்வளர் கயிலைப் பனிமலை முனிவா..." என்று தொடங்கும் ஒரு உள்ளமுருகும் பாடலுடன் வந்திருந்தார். அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே தன்வசம் இழந்து விம்மி அழுதார். "இவரே என் இறைவன்" எனத் தன் வாழ்வையே ரமணருக்கு அர்ப்பணித்து 'ரமண சந்நிதி முறை' மற்றும் 'குரு வாசகக் கோவை' ஆகிய பொக்கிஷங்களை உலகிற்குத் தந்தார். முழுமுதற் கடவுள் எவ்வாறு அன்பால் மெய்மறந்து அவரது உருவத்தை ஏற்று பக்தர்களுடன் திருவிளையாடல் புரிந்தார் என்பதை இவர் அழகாகக் குறிப்பிட்டுள்ளார். ஈடு இணையற்ற இந்தக் கவிஞர், தனது முழு வாழ்க்கையையும் பூரண சரணாகதியின் நித்திய கீதமாக மாற்றி, மௌன குருவின் தெய்வீக ஞானத்தை மிகச் சரியாகப் படம்பிடித்துக் காட்டி, உண்மையான ஆன்மிக சாதகர்கள் அனைவரையும்

*இறுதி அக அமைதியை நோக்கி மென்மையாக வழிநடத்துகிறார்.*

- *சாது ஓம்: முருகனாரின் நிழலாக வாழ்ந்து, பகவானின் உபதேசங்களை எளிய தமிழில் கவித்துவமாக வடித்தவர். இவரும் முதல் தரிசனத்திலேயே பகவானின் பேரன்பில் கட்டுண்டவர்.*

## *6. திசை எட்டும் பரவிய ரமண ஒளி: மேற்கத்திய தேடல்கள்*

*மேற்கத்திய நாடுகளின் லைாகீக வாழ்வைத் துறந்து வந்தவர்கள், பகவானின் மௌன மொழியில் தங்களின் ஆத்மார்த்தமான அமைதியைக் கண்டனர். "நான் எப்படி பகவானிடம் வந்தேன்" (How I Came to Bhagavan) என்ற அவர்களின் பதிவுகள் ஆன்மிக உலகின் பொக்கிஷங்கள்.*

- *பால் பிரண்டன் (Paul Brunton): இந்தியாவைச் சுற்றித் திரிந்து இறுதியில் ரமணரிடம் வந்தபோது, அந்த மௌனமான பார்வை இவரின் அகந்தையைத் தரைமட்டமாக்கி, ஞானப் பேரொளியில் கலக்கச் செய்தது. 'A Search in Secret India' மூலம் ரமணரை உலகிற்கு அறிமுகப்படுத்தியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு.*
- *மேஜர் சாட்விக் (Major A.W. Chadwick): பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய இவர், 1935இல் பகவானின் சந்நிதியில் நுழைந்த அந்த நிமிடம், "நான் என் சொந்த வீட்டிற்கு வந்துவிட்டேன்" (I have come home) என்ற ஆழமான உணர்வில் திளைத்து, வாழ்நாள் முழுதும் அங்கேயே தங்கினார்.*
- *ஆர்தர் ஆஸ்போர்ன் (Arthur Osborne): முதல் சந்திப்பில் பகவானின் ஊடுருவும் பார்வை, இவருக்குள் ஒரு 'மௌனமான இதய மாற்றத்தை' ஏற்படுத்தியது. இவர் ஆங்கிலத்தில் 'தி மவுண்டன் பாத்' (The Mountain Path) என்ற புகழ் பெற்ற ஆசிரமப் பத்திரிகையைத் தொடங்கினார். இந்த சஞ்சிகை பகவானின் புகழையும், இந்தப் பக்தர்களின் நித்ய அனுபவங்களையும் காலங்காலமாகச் சுமந்து செல்கின்றன.*

- *எஸ். எஸ். கோஹன் (S.S. Cohen): ஈராக் நாட்டைச் சேர்ந்த யூதரான இவர், அமைதியைத் தேடி 1936ல் திருவண்ணாமலை வந்தார். பழைய ஹாலில் நுழைந்தவுடன் பகவான் அமர்ந்திருந்த கம்பீரத்தையும் அமைதியையும் கண்ட கோஹன், "ஒரு மாபெரும் தெய்வீக சக்கரவர்த்தியின் முன் நிற்பதை" உணர்ந்தார்.*
- *எலியனோர் பாலின் நோயி (Eleanor Pauline Noye): தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகளால் மனமுடைந்து தற்கொலை வரை சென்ற இந்த அமெரிக்கப் பெண்மணி, பகவானை முதன்முதலில் கண்டபோது, ரமணரின் பார்வை மரணத்தைக் கடந்த அமைதியையும், ஒரு தாயின் அன்பையும் வழங்கி அவரை மறுபிறவி எடுக்கச் செய்தது.*

## *தரிசனத்தின் சாரம்: மௌனமே மகா மொழி*

*நூற்றுக்கணக்கான பக்தர்களில் சில குறிப்பிட்ட பக்தர்களைக் கண்டோம். அந்த பக்தர்களின் முதல் சந்திப்பில் ஒரு பொதுவான அம்சம் இருந்தது அது "மௌனம்". அவர்கள் தங்கள் வாழ்வில் எத்தனையோ துயரங்களுடனும், தீர்க்க முடியாத தத்துவக் கேள்விகளுடனும் வந்தனர்; ஆனால், பகவானின் அந்தத் தீட்சண்யமானப் பார்வையையும், தெய்வீகப் புன்னகையையும் கண்டவுடன் கேள்விகள் அனைத்தும் பனிபோல் கரைந்தன; மௌனம் மட்டுமே எஞ்சியது.*

*அப்பர் பெருமான் திருவையாற்றில் கண்ட அதே சிவதரிசனத்தை, இந்தப் பக்தர்கள் திருவண்ணாமலையில் ரமண மகரிஷிகளின் திருவுருவில் கண்டனர். அந்த முதல் சந்திப்பு அவர்களுக்குள் ஒரு புதிய அகவாழ்வைத் தொடங்கி வைத்தது. பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரைசேரத் துடிக்கும் ஒவ்வொரு ஆன்மாவிற்கும், ரமணரின் அந்தப் பார்வை இன்றும் ஒரு கலங்கரை விளக்கமாக, கருணைப் பெருங்கடலாகத் திகழ்கிறது.*

*"கண்டேன் அவர் திருப்பாதம்... கண்டறியாதன கண்டேன்!" இதுவே ஒவ்வொரு ரமண பக்தரின் நெஞ்சத்திலும் ஒலிக்கும் நித்ய அனுபவம்.*

# ரமண புராணம்

## விளங்கியவகையில் விளக்கும்
## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (171– 184)

*பாடல் வரிகள்*

*“தம்மையெலாம் தாங்குபெருந் தாணுவாம்*
*பண்டியிற்றம்* 171
*சும்மையும்தாம் போட்டுத் துயர்நீங்கும் பாங்கறியார்*
*தாங்குவதாய் அச்சுமையைத் தம் தலைமேல்*
*ஆணவத்தால்*
*வாங்குவதால் என்றும்தாம் வாளா வருந்துறுவார்*
*மூரிநீர் போல முழங்குவார் மூங்கையராய்*
*யாரைநீர் என்னின் இருந்தாங்கு ஒடுங்குறுவார்*
*ஊனப் பிணம்போல் உறங்கி உணர்வு ஆற்றல் ஒழிந்து*
*ஏனை அவத்தைக் கண் எழுப்பினால் அன்றிஎழார்*
*தன்னை எழுப்பிவிடின் தானே தனிப்பொருது*
*துன்னலரை எல்லாம் தொலைப்பல் எனும்*
*ஓர்முடன் போல்* 180
*தாம் இயங்கும் தன்மை சிவசக்தியால் என்றுஉணரார்*
*தாம்மயங்கிச் சித்திபல சார்வதாச் சேட்டிப்பார்*
*உச்சமத்த மாக்கள் உளறுபடி ஊக்கமாம்*
*அச்சமர்த்தை எள்ளிநகை ஆடுவோன் தாள்போற்றி “* 184

*பாடலும் விளக்கமும்*

*தம்மையெலாம் தாங்குபெருந் தாணுவாம் பண்டியிற்றம்* 171
*சும்மையுந் தாம் போட்டுத் துயர்நீங்கும் பாங்கறியார்*
*தாங்குவதாய் அச்சுமையைத் தம் தலைமேல் ஆணவத்தால்*
*வாங்குவதால் என்றும் தாம் வாளா வருந்துறுவார்!* 174

*பதவுரை: தாணுவாம்: 'தாணு' என்றால் அசைவற்ற தூண். இங்கே எப்போதும் நிலைத்திருக்கும் இறைவனைக் (சிவபெருமானைக்) குறிக்கிறது. அகில உலகங்களையும், அதில் உள்ள அனைத்து உயிர்களையும் அசைவின்றித் தாங்கிநிற்கும் அந்தப் பெரும் பரம்பொருளை இது குறிக்கும்.*

*பண்டி – வண்டி; சும்மை – சுமை; பாங்கு – வகை அல்லது வழி (இறக்கி வைக்கும் முறை); வாளா வருந்துறுவார் – 'வாளா' என்றால் காரணமின்றி அல்லது சும்மா என்று பொருள். எந்தப் பயனும் இல்லாமல், தேவையற்ற கவலைகளை எண்ணி வீணாக வருந்துவதைக் குறிக்கும்.*

*விளக்கம்: நம் எல்லோரையும் தாங்கிச் செல்லும் பெரிய வண்டியாக (பண்டியாக) இறைவன் இருக்கிறான். அந்த வண்டியில் நம்முடைய துன்பங்கள், கவலைகள் என்னும் சுமையை இறக்கி வைத்துவிட்டு அமைதி அடையும் வழியைப் பலரும் அறியவில்லை.*

*"நானே எல்லாவற்றையும் செய்கிறேன்" என்ற ஆணவத்தினால் (அகங்காரத்தினால்), அந்தப் பெரும் சுமையை இறைவனிடம் ஒப்படைக்காமல், தாங்களே தங்கள் தலைமேல் தூக்கிச் சுமக்கிறார்கள். வண்டியில் பயணம் செய்பவன், தன் தலைச்சுமையை வண்டியிலேயே இறக்கி வைக்காமல், தன் தலையிலேயே சுமந்து கொண்டு வருந்துவதைப் போன்ற அறியாமையில் அவர்கள் இருக்கிறார்கள். இதனால், எந்தப் பயனும் இன்றித் தேவையற்ற துன்பங்களுக்கு ஆளாகிறார்கள்.*

*மூரி நீர் போல முழங்குவார் மூங்கையராய்*
*யாரை நீர் என்னின் இருந்தாங்கு ஒடுங்குறுவார்*

*சொற்பொருள்: மூரி நீர் – 'மூரி' என்பதற்கு வலிமை அல்லது பெருமை என்று பொருள். இங்கு 'மூரி நீர்' என்பது ஆர்ப்பரிக்கும் பெருங்கடலைக் குறிக்கிறது.*

மூங்கையர் – பேசும் திறனை இழந்தவர் அல்லது ஊமை என்று பொருள்.

இருந்தாங்கு – அவர்கள் அதுவரை வீணாகப் பெருமை பேசிக் கொண்டிருந்த இடத்திலேயே.

ஒடுங்குறுவார் – பயந்து போய்த் தன்மானத்தை இழந்து, சத்தமில்லாமல் ஒடுங்கிப் போவார்கள்.

**விளக்கம்:** சில மனிதர்கள், ஆர்ப்பரிக்கும் கடல் நீரைப் போலத் தங்களைப் பற்றி மிகையான பெருமைகளைப் பேசிக்கொண்டு வீணாகச் சத்தம் போடுவார்கள். ஆனால், அந்தப் பெருமையின் உண்மைத்தன்மையை உணர்ந்த ஞானிகள் யாராவது வந்து, “நீ யார்? உன் தகுதியென்ன?” என்று அவர்களிடம் கேள்வி கேட்டால், பதில் சொல்லத் தெரியாமல் ஊமைகளைப் போலத் திகைத்து, தாங்கள் இருந்த இடத்திலேயே ஒன்றும் பேச முடியாமல் ஒடுங்கிப் போய்விடுவார்கள்.

***ஊனப் பிணம்போல் உறங்கி உணர்வு ஆற்றல் ஒழிந்து***
***ஏனை அவத்தைக் கண் எழுப்பினால் அன்றி எழார்***
***தன்னை எழுப்பிவிடின் தானே தனிப்பொருது***
***துன்னலரை எல்லாம் தொலைப்பன் எனும் ஓர் முடன் போல்***

**பதவுரை:** ஊனப் பிணம்போல் – ஊனப் பிணம் என்பது மாமிசத்தால் (ஊனம்) ஆன உடம்பைக் குறிக்கும் ஆன்மிக மற்றும் இலக்கியச் சொல்லாகும். பழங்கால தமிழ் இலக்கியங்கள், திருமுறை மற்றும் தத்துவப் பாடல்களில், அழியும் இயல்புடைய இந்த மனித உடலை நிலையற்ற பிணமாக உருவகப்படுத்தி இப்பதம் பயன்படுத்தப்படுகிறது.

பொருள் விளக்கம்: ஊனம்: மாமிசம், தசை அல்லது குறைபாடு; பிணம் – உயிர் இல்லாத சடலம்., ஆன்மிக உண்மைகளை உணர்த்தும் பொருட்டு உடலின் நிலையாமை ‘ஊனப் பிணம்’ எனப்படுகிறது.

**‘உறங்கி உணர்வு ஆற்றல் ஒழிந்து’**

விழிப்புணர்வு இல்லாமல், ஆன்மிக அறிவைப் பெறாமல் உடலை மட்டுமே நம்பி வாழும் வாழ்க்கை, உணர்ச்சியற்ற ஒரு "பிணத்திற்கு" (சடலத்திற்கு) சமம் என்பதை இது குறிக்கிறது.

'ஏனை அவத்தைக்கண் எழுப்பினால் அன்றி எழார்'

**விளக்கம்:** ஒரு அவத்தை நிலையில் இருந்து மற்றும் வேறு ஒரு நிலைக்கு தாமாகவே ஜீவன் மாறுவதில்லை. குரு அல்லது ஆன்மாவின் அருளால்தான் நிலைகளில் மாற்றம் நிகழும். இங்கு ஊனப் பிணம்போல்... எனும் நிலையில் இருக்கும் ஒரு ஜீவன் மற்ற நிலைக்கு மாற புற உந்துதலாக "ஏனை அவத்தை கண்" என்று வருகின்றது.

**கருத்து:** உயிரானது (ஆன்மா) தூக்கத்தின் போது, எந்தவித உணர்வும் இன்றி உடலை விட்டு நீங்காமல் பிணம் போல் உறங்கிக் கிடக்கும். அந்த நிலையில் அதனுடைய அறிவு மற்றும் ஆற்றல் ஒடுங்கி (மறைந்து) இருக்கும். பின்னர் இறைவன் அல்லது குருவானவர் அந்த உயிரை நனவு நிலைக்கு எழுப்பினால் அன்றி, அது தானாக விழித்தெழாது.

'தன்னை எழுப்பிவிடின் தானே தனிப்பொருது
துன்னலரை எல்லாம் தொலைப்பன் எனும் ஓர்முடன் போல்'

**பதவுரை:** தன்னை எழுப்பிவிடின் – தானாக எழுவதற்கான திறமை கூட இல்லாத நிலையில், வேறு யாராவது தூக்கி விட்டால்; தானே தனிப்பொருது – எழுப்பி விட்ட பின் தானே தனியாக போரிட்டு; துன்னலர் – எதிரிகள்; முடன் – முடவன்.

தானாகவே தனித்து வேறு யாருடைய துணை இன்றி, பகைவர்களை அழித்து விடுவேன் என்று சொன்ன முடவனின் கதை போல்.

**விளக்கம்:** "யாராவது என்னை எழுப்பி விட்டால் போதும், நான் ஒருவனே தனியாகப் போரிட்டு என்

எதிரிகள் எல்லோரையும் அழித்து விடுவேன்" என்று தூக்கத்தில் பிதற்றும் ஒரு மூடனைப் போல இவர்கள் இருக்கிறார்கள்.

*தாம் இயங்கும் தன்மை சிவசக்தியால் என்று உணரார்*
*தாம் மயங்கிச் சித்தி பல சார்வதாச் சேட்டிப்பார்*
*உச்சமத்த மாக்கள் உளறுபடி ஊக்கமாம்*
*அச் சமர்த்தை எள்ளி நகை ஆடுவோன் தாள் போற்றி*

**பதவுரை:**

*'தாம் இயங்கும் தன்மை சிவசக்தியால் என்று உணரார்'*

மனிதர்களாகிய நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், நம்மிடம் இருக்கும் அறிவும், ஆற்றலும் சிவசக்தியின் (இறைவனின்) பேரருளால் தான் இயங்குகின்றன. ஆனால், இந்த உண்மையை மனிதர்கள் உணர்வதில்லை.

*'தாம் மயங்கிச் சித்தி பல சார்வதாச் சேட்டிப்பார்:'*

அப்படி உணராமல், "எல்லாம் என்னால் தான் நடக்கிறது" என்ற அகந்தை மயக்கத்தில் (ஆணவத்தில்) மூழ்கி விடுகிறார்கள். தாங்கள் நினைத்த காரியங்களைச் சாதிக்கவும், பலவிதமான சித்துக்களை (ஆற்றல்களை) அடையவும் வீணாக அலைந்து திரிந்து ஆரவாரம் செய்கிறார்கள்.

*'உச்சமத்த மாக்கள் உளறுபடி ஊக்கமாம்'*

இவர்களின் இந்தச் செயல்கள் எப்படிப்பட்டது தெரியுமா? அளவுக்கு அதிகமாகக் கள்ளைக் குடித்துவிட்டு, போதை உச்சந்தலைக்கு ஏறிய ஒரு பித்தன் (மத்தன்) என்ன செய்கிறோம் என்று தெரியாமல் உளறுவதைப் போன்றது. அத்தகைய அறிவற்ற மனிதர்களின் வீண் முயற்சிகளே இவை.

*'அச் சமர்த்தை எள்ளி நகை ஆடுவோன் தாள் போற்றி'*

தங்களை மிகப் பெரிய 'சமர்த்தர்கள்' (புத்திசாலிகள்) என்று நினைத்துக் கொண்டு ஆடும் இவர்களின் அறியாமையைக் கண்டு, எள்ளி நகையாடி (புன்னகைத்து), அவர்களின் ஆணவத்தை அடக்கும்

*அந்த இறைவனின் திருவடிகளைப் (தாள்) போற்றி வணங்குகிறேன்.*

*பாடலின் பொருள் விளக்கம்: "இறைவனின் (சிவசக்தியின்) அருளால்தான் நாம் இயங்குகிறோம் என்பதை அறியாமல், "எல்லாம் என்னால் தான் நடக்கிறது" என்ற அகந்தை மயக்கத்தில் (ஆணவத்தில்) மூழ்கி விடுகிறார்கள். தாங்கள் நினைத்த காரியங்களைச் சாதிக்கவும், பலவிதமான சித்துக்களை (ஆற்றல்களை) அடையவும் வீணாக அலைந்து திரிந்து ஆரவாரம் செய்கிறார்கள்.*

*சுருக்கமாகச் சொன்னால், "இறைவனின் (சிவசக்தியின்) அருளால்தான் நாம் இயங்குகிறோம் என்பதை அறியாமல், தன்முனைப்பால் (அகந்தையால்) ஆடுபவர்களை பார்த்து இறைவன் புன்னகைக்கிறான்" என்பதே இதன் பொருள்.*

*சுருக்கம் (Core Message): இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களையும் தாங்கி இயக்குவது சிவசக்தி தான். ஆனால், மனிதர்கள் தங்கள் ஆணவத்தால் "நான் செய்கிறேன், என்னால் தான் நடக்கிறது" என்று நினைத்து, கவலைகளையும் பொறுப்புகளையும் தங்களே சுமந்து கொண்டு வீணாக வருந்துகிறார்கள். தங்களை யாரென்று கேட்டால் விடை தெரியாமல் அறியாமை உறக்கத்தில் கிடக்கிறார்கள். இறைவனின் ஆற்றலால் தான் நாம் இயங்குகிறோம் என்பதை உணராதவர்கள் மூடர்களைப் போன்றவர்கள் என்று இப்பாடல் விளக்குகிறது.*

*ரமணபுராண வாக்குகளை தொடர்ந்து மீண்டும்*
*புரிந்து கொண்ட வகையில் பகிர்கிறேன்*

# அஞ்சல் என்றே அருள் அருணாசலா

## தீபா மகேஷ்

"ஞானத் தபோதனரை வா" என்றழைக்கும் திருவண்ணாமலை, பகவான் ரமண மகரிஷியை தன்னிடம் ஈர்த்தது. ஒரு பெரிய காட்டாற்று வெள்ளத்தில் மாட்டிக் கொண்ட சிறு துரும்பைப் போல, மதுரையில் இருந்து கிளம்பிய பதினாறு வயது பாலகனான பகவான், தன் உடல் பிரஜ்ஞையற்று, பேரானந்தத்தில் மூழ்கி இருந்தபடியே செப்டம்பர் 1 ஆம் நாள், 1896 ஆம் ஆண்டு, அருணை வந்தடைந்தார். அதற்குப் பின், தான் சரீரமோடு இருந்த 54 ஆண்டுகளில், அருணாசலத்தை விட்டு எங்கேயும் செல்லவில்லை.

பகவான், உபதேச உந்தியார், உள்ளது நாற்பது, பகவத் கீதா சாரம் என எத்தனையோ வேதாந்த நூல்களை நமக்கு அளித்திருந்தாலும், அவற்றிற்கெல்லாம் இல்லாத ஒரு பெருமை, பகவானின் அக்ஷரமணமாலைக்கு உண்டு.

ஒரு ஞானி உணர்ச்சிகள் அற்ற "உணர்வு" நிலையில் இருப்பவர். ஆனால், நாமோ பெரும்பாலும் உணர்ச்சிகளிலேயே உழன்று கொண்டு இருப்பவர்கள்.

அதனாலேயே, அத்வைத ஞானத்தின் சிகரமான பகவான் ரமணர், நம்மைப் போன்ற சாதகர்களுக்காக, பக்தர்களுக்காக, தன்னை ஒரு பக்தனாக, சாதகனாக பாவித்து எழுதிய ஒப்புயர்வில்லாத க்ருதி அக்ஷரமணமாலை.

இதில் உள்ள 108 பாடல்களும், உயர்ந்த வேதாந்த தத்துவங்களையும், உயரிய பக்தி நிலையையும் ஒரு சேர நமக்கு உணர்த்துகின்றன.

“திருவாசகத்திற்கு உருகார், ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்று ஒரு பழமொழி உண்டு. அது அக்ஷரமணமாலைக்கும் சாலப் பொருந்தும்.

ஒரு பக்தனுக்கே உரிய தாபம், ஏக்கம், பயம், ஆசை, கோபம், ஆற்றாமை போன்ற பல உணர்ச்சிகளை நாம் அக்ஷரமணமாலைப் பாடல்களில் பார்க்கலாம்.

எந்த உணர்ச்சியுமே நம்மை போன்ற சக மனிதர்களிடமும், உலக விஷயங்களிலும் தோன்று மானால், அவை நம்மை மறுபடியும் பிறப்பு இறப்பு என்ற சம்சார மாயையில் இட்டு விடுகின்றன. ஆனால் அதுவே இறைவனை நோக்கி திரும்புமானால், மாயையில் இருந்து விடுபட்டு முக்தி மார்கத்திற்கான பாதையில் அழைத்து செல்கின்றன.

உதாரணத்திற்கு, கிருஷ்ணாவதாரத்தில், கோபிகைகள் கண்ணன்மேல் கொண்ட தீவிர விரக தாபத்தால், எப்போதும் அவனையே தியானித்து உயரிய பதத்தை அடைந்து அவனோடு ஒன்றினார்கள்.

கண்ணனைக் கொல்ல பல அரக்கர், அரக்கிகளை அனுப்பி வைத்த கம்ஸன், கிருஷ்ணன் வந்து தன்னை கொன்று விடுவான் என்று சதா சர்வ காலமும் பயந்து கொண்டு இருந்தான். அந்த பயமே அவனுக்கு கிருஷ்ணத் தியானம் ஆனது. அதனாலேயே, கம்ஸ வதத்திற்குப் பின் அவனிடம் இருந்து கிளம்பிய ஜோதி பரந்தாமனிடம் கலந்தது.

பயம் என்பது ஒரு மிக ஆழமான ஒரு உணர்ச்சி. அது சிறியவர், பெரியவர், நல்லவர், கெட்டவர், ஆண், பெண், ஆஸ்திகர், நாத்திகர் என எந்த பேதமும் இல்லாமல் எல்லோரையும் ஆட்கொள்கிறது. நாம்

அனைவரும் வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில் பயத்தை அனுபவித்திருக்கிறோம்.

பயம், அனுபவிப்பவர்களை பொறுத்தமட்டில், மிக நியாயமான, நிஜமான ஒன்றாக இருக்கிறது. ஆனால் மற்றவர்களின் பார்வைக்கு பெரும்பாலும், அர்த்தமற்றதாகவும், அநாவசியமாகவும் இருக்கிறது. இது ஒரு விசித்திரமான உண்மை.

பயம், பாகுபாடு அற்று நம் அனைவரையும் பற்றுவதை, பர்த்ருஹரி என்ற யோகி இப்படி சொல்கிறார்.

போகே ரோக பயம், குலே சுதி பயம், வித்தே
ந்ருபாலத்பயம்
மானே தைந்ய பயம், பலே ரிபு பயம், ரூபே
ஜராயா பயம்
ஷாஸ்த்ரே வாதி பயம், குணே கல பயம் காயே
க்ருதாந்தாத் பயம்
ஸர்வம் வஸ்து பயான்விதம் புவி ந்ருணாம்
வைராக்யமேவ அபயம்

இன்பம் (போகம்) அனுபவிப்பவருக்கு நோய் வரும் என்ற பயம் உள்ளது. உயர்ந்த குலத்தில் (வம்சத்தில்) பிறந்தோருக்கு, தமது கௌரவம் அல்லது அந்தஸ்து குறைந்துவிடுமோ என்ற பயம் உள்ளது. செல்வம் (வித்தம்) உள்ளவருக்கு அரசனிடமிருந்து வரி அல்லது கொள்ளை பயம் உள்ளது. புகழிலும் மதிப்பிலும் (மானம்) உள்ளவருக்கு, அவமானம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் உள்ளது.

பலம் (சக்தி) உள்ளவருக்கு எதிரிகளால் (ரிபு) ஆபத்து வருமோ என்ற பயம் உள்ளது. அழகு (ரூபம்) உள்ளவருக்கு வயதாகிவிடுமோ (முதுமை) என்ற பயம் உள்ளது. கல்வி மற்றும் சாஸ்திர அறிவு உள்ளவருக்கு, தன்னை விட சிறந்த வாதிகளிடம் தோற்றுவிடுவோமோ என்ற பயம் உள்ளது.

*நல்ல குணங்கள் மற்றும் நற்பண்புகள் உள்ளவருக்கு பொறாமை கொண்ட துஷ்டர்களால் (களன்) ஆபத்து வருமோ என்ற பயம் உள்ளது. உடல் (காயம்) உள்ளவருக்கு எமன் (மிருத்யு) வந்துவிடுவானோ என்ற பயம் உள்ளது.*

*இப்படி உலக விஷயங்களை நாம் அனுபவிக்கும் போது, அதை இழந்து விடுவோமோ என்ற பயத்தோடேயே அனுபவிக்கிறோம்.*

*பற்றுகள் அற்ற வைராக்கிய நிலை ஒன்று தான் நமக்கு நிலையான அபயத்தை அளிக்கிறது. அந்த அபயம் குருவருளினாலேயே கிடைக்கிறது.*

*பகவான் தேகமோடு இருந்த கடைசி நாட்களில், சிறந்த பக்தர்களில் ஒருவரான ஜீ.வி. சுப்பராமையர், கண்களில் கண்ணீர் பெருக பகவானைத் தரிசிக்க வந்தார். அவரை அன்போடு உள்ளே (இப்போதைய மஹா நிர்வாண அறை) அழைத்த பகவான், “ஏமி காவாலி? (என்ன வேண்டும்?)” என்றார்.*

*சுப்பராமையர், “அபயம் ஈவாலி (வேண்டும்)”, என்று கண்ணீர் மல்க பிரார்த்தித்தார்.*

*பகவான், “சரி, இச்சானு (தந்தேன்)” என்று அருளினார்.*

*பகவான் அன்று அஞ்சல் என்று கொடுத்த அருள் வாக்கு சுப்பராமையருக்கு மட்டுமல்ல, நாம் அனைவருக்கும் தான்.*



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### மஹா பூஜை

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மை சமாதி தினம் மஹா பூஜையாக ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்படுகின்றது. இவ்வாண்டு 9/6/2026 செவ்வாய்க்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் (தாயார் சந்நிதி) மஹா பூஜை சிறப்பாக நடைபெற்றது.*

*மகனின் திருக்கரத்தால் முக்தியடையும் பேறுபெற்ற அழகம்மையின் சமாதி ஆலயமான மாத்ருபூதேச்வரர் ஆலயம் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.*

*சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், மற்றும் இராமநாதபுரம் முருகனார் மந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை ரமணாலயத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் நூற்றுக்கும் மேலான ரமண அன்பர்கள் முழு*

*நேரமும் அமர்ந்து ஆத்மார்த்தமாக பாராயணத்தில் ஈடுபட்டது சிறப்பம்சம். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. மயிலாப்பூர் ஸ்ரீ ரமண கேந்திரத்தில் அடுத்தநாள் திருவாசக முற்றோதம் நடைபெற்றது. திரு. சத்குருநாத ஓதுவார் சந்நிதிமுறை பன்னிசையுடன் பாடி மகிழ்வித்தார். திரளாக பக்தர்கள் கலந்து கொண்டனர்.*

## பசு லக்ஷ்மி ஆராதனை 2026

*பசு லட்சுமியின் ஆராதனை 26/6/2026, வெள்ளிக்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லக்ஷ்மி சமாதியில் சிறப்பாக நடந்தேறியது. சிறப்புற அலங்கரிக்கப்பட்ட பசு லக்ஷ்மி சமாதிக்கு விசேஷ பூஜைகள் மற்றும் பசு லக்ஷ்மியின் மேல் பகவான் இயற்றிய வெண்பா, மணவாசி ராமசாமி ஐயர் இயற்றிய பாடல் மற்றும் பிரத்யேகமாக பசு லக்ஷ்மிக்கென பக்தர்கள் இயற்றிய பாடல்களைப் பாடி அன்பர்கள் பசு லக்ஷ்மியை வழிபட்டனர்.*

*சென்னை ரமண கேந்திரம் மற்றும் ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் பசு லக்ஷ்மி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## அடி அண்ணாமலையார் ஆலய கும்பாபிஷேகம்

*அடிஅண்ணாமலை கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க, பிரம்மாவால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீ அபிகுசாம்பாள் (உண்ணாமுலை அம்மன்) சமேத ஸ்ரீ ஆதி அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக செய்தித் தொகுப்பு:*


*2026 மஹா கும்பாபிஷேகம்: இவ்வாலயத்தின் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன, ஸ்வர்ணபந்தன மஹா கும்பாபிஷேகம் அண்மையில் விமரிசையாக நடைபெற்றது. கடந்த ஜூன் 26 (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை மற்றும் கணபதி, நவக்கிரக ஹோமங்களுடன் விழா துவங்கியது. தொடர்ந்து, ஜூன் 29 (திங்கள்) மாலை யாகசாலை பிரவேசத்துடன் முதற்கால*

*பூஜைகள் தொடங்கி, ஜூலை 1 அன்று மாலை ஆறாம் கால பூஜைகள் நடைபெற்றன.*

*இதன் முக்கிய நிகழ்வாக, ஜூலை 2 அன்று காலை 5 மணிக்கு பரிவார மூர்த்திகளுக்கும், காலை 10.15 மணிக்கு இராஜகோபுரம் மற்றும் சகல விமானங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. காலை 11 மணியளவில் மூலவர் சுவாமிஅம்பாளுக்கு மஹா கும்பாபிஷேக தீபாராதனை நடைபெற்றது. அன்றைய தினம் மாலை சிறப்பு மஹா அபிஷேகமும், இரவு பஞ்சமூர்த்திகள் முன்னிலையில் திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து சுவாமிஅம்பாள் வெள்ளி ரிஷப வாகனத்தில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தனர். வாரம் முழுவதும் நடைபெற்ற இவ்விழாவில் வேதபாராயணம், திருமுறை பண்ணிசை, நாதஸ்வர இன்னிசை மற்றும் ஆன்மிகச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அண்ணாமலையாரின் அருள் பெற்றனர்.*

*முந்தைய கும்பாபிஷேகங்களின் சுருக்கம்: இதற்கு முன்னதாக, 2012ஆம் ஆண்டு ஜூலை 10ல் முதற்கட்ட பூஜைகள் தொடங்கி, ஜூலை 12 மாலை 39 ஹோம குண்டங்களுடன் யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. பின்னர் ஜூலை 15 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது.*

*அதற்கும் முன்பாக, 1996ஆம் ஆண்டு பிப்ரவரி 5 முதல் பூர்வாங்கச் சடங்குகள் தொடங்கி, பிப்ரவரி 9 அன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. வருண லிங்க பகுதியில் வாழ்ந்த சுவாமி ரமணானந்த சரஸ்வதியின் மஹா முயற்சியால் ₹25 லட்சம் மதிப்பில் திருப்பணிகள் செய்யப்பட்டு நடைபெற்ற இவ்விழாவில், காஞ்சி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*



*சீனப்பா என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட திரு. வெங்கடேசன் (1957–2026), பகவான் ரமண மகரிஷியிடம் மூன்று தலைமுறைகளாகப் பக்தி கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தாத்தா சுந்தரராம கணபாடிகள், ஆஸ்ரம வேத பாராயணத்தைத் தொடங்கி வேத பாடசாலை அமைய உதவினார். பெரியப்பா ராஜு சாஸ்திரிகள் மாத்ருபூதேஸ்வரர் ஆலய ஸ்ரீ சக்ர மேருவை வடிவமைத்து, பகவானிடம் லட்சுமி விக்கிரகத்தைப் பரிசாகப் பெற்றவர்.*

*தந்தை கிட்டு ஐயரைப் போல பத்திரப் பதிவு, கோர்ட் மற்றும் ஆஸ்ரம தட்டச்சுப் பணிகளைச் செய்து வந்த வெங்கடேசன், ஆஸ்ரமத்தின் வங்கி மற்றும் அரசுத் தொடர்புப் பணிகளையும் கவனித்து வந்தார். 2021இல் மனைவியை இழந்த இவர், தன் மனைவியின் நினைவோடும் விடாமுயற்சியான தினசரி சிவபூஜையோடும் ஆஸ்ரம பணிகளையும் செய்துவந்த இவர், 2026 ஏப்ரல் 21 அன்று அமைதியாக இறைவனடி சேர்ந்தார்.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



மாத்ருபூதேஸ்வரர் மஹா பூஜை 9/6/2026

அடி அண்ணாமலை ஆலய கும்பாபிஷேகம் 2/7/2026



Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

